உ

கணபதிதுணை.

# வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—திருக்குறள்.


| தொகுதி | பிங்கள ௵ புரட்டாசி ௴ | பகுதி |
| --- | --- | --- |
| 9 | October 1917. | 9. |


## கல்வியும் தேசாபிமானமும்.

இதுவரையில் நமது பாநுவிற் கல்விவிஷயமாக எழுதப்பெற்றுவந்தவையும், இதற்கு முன் ஸஞ்சிகையிற் குறித்துள்ள "போல்பூர் பிரமசரிய ஆசிரமம்" என்னும் விஷயமும், தத்தம் தேசாசாரங்கட்குத் தக மாணவர்கள் கற்பிக்கப்பெறல் வேண்டுமென்பதையே வற்புறுத்துகின்றன. இனி இந்த ஸஞ்சிகையிற் "கல்வியும் தேசாபிமானமும்" என்று எடுத்துக்கொண்டு, தேசமுன்னேற்றத்தைக்கோரி மாணவர்களைப் பயிற்றும் முறையைப் பற்றிச் சிறிது ஆராய்வாம்.

மாணவர்கள், கல்லூரியிற் பயிலுங்காலமுதலே, தேசாபிமானப்பால் ஊட்டப்பெற்றுவந்தால்தான் "பீசம்பேணி பாரந்தாங்கும்" என்றபடி மனிதரானபிறகு ஸ்வதந்த்ரத்தையநுபவிக்கவேண்டியவிடங்களில் அதிற்பிழையாது உறுதியாக நிற்பார்கள். தேசாபிமானப்பாலைச் சிறிது சிறிதாகவேனும் அருந்திவரவேண்டுவது அவசியம். அந்தத் தேசாபிமானப்பாலும் பூர்விகாசாரங்களைக் கைசோரவிடாது நவீனமுறைகளில் நன்மையானவைகளுள் அவசியம் வேண்டியவற்றைச் சேர்த்துக்கொண்டு ஊட்டப்பெறல்வேண்டும். அப்படி

யானவழியிற் போதிக்க உபாத்தியாயர்களும் நன்கு ஆலோசித்துப் பயிலவேண்டும். உபாத்தியாயர்களுக்கே, அவ்வழியில் ஆர்வமும் உழைப்பும் அபிமானமும் இருந்தால் அல்லாமல், இவ்வழி நடந்தேறாது. ஒருகால் போதிக்கப்பெறினும் மாணவர் நெஞ்சில் நன்கு பதியாது. இதனால் உபாத்தியாயர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டியவர்களாகவே ஆகிறார்கள். ஆத்மபரித்யாகமும் மனோபலமும் தேசாபிமானமும் தேசபக்தசரித்திரங்களிற்றேர்ச்சியும் மனோற்சாகமுமுடையவர்களே இத்தகைய உத்யோகங்கட்கு ஏற்றவராவார்கள். இவற்றுடன் அவர்கட்கு, ஒரு உபாத்தியாயர்க்கு அவசியம் அமைய வேண்டியனவாகிய கோபமின்மை பட்சபாதமின்மை அலக்ஷியமின்மை நாஸ்திக்யமின்மை அநாசாரமின்மை இவ்வைந்தும் உறுதியான வேருடன் ஊன்றியமைந்திருக்கவேண்டும். இப்படியமைந்தால், நமது தேசம் பின்னர்ச் சிறிதுகாலத்தில் இப்போதிருக்கும் பழிப்புக்கடலிலிருந்து கரையேறும்.

நமது தேசம், இப்போது ஒரு திடீரென்ற மாறுதலையடையக்கூடிய மார்க்கத்திற் போய்க்கொண்டிருக்கிறது. அதற்கு ஏற்றபடி இப்போதுமுதலே நமது மாணவர்களை ஆயத்தப்படுத்திக்கொண்டு வந்தாலல்லாமல், நமது தேசம் நாம் உத்தேசித்திருக்கும் மாறுதலில் நிலைபெறாது. நமது உத்தேசமாறுதலும், நமது தேசம் தனது காலிலேயே நின்று நடைபெறவேண்டுமென்பதான தீர்மானத்திலிருக்கவேண்டும். நாமே விளைத்து நாமேபயிராக்கி நாமே அவற்றினின்றும் நமக்கு அவசியமானவற்றையுண்டாக்கி எவ்விஷயத்திலும் தற்காப்புடனிருந்து நமது தேசாசார சரித்திரங்களைப் போதிப்பித்துக்கொண்டு ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்பதே நமது உத்தேசமாகவேண்டும். ஆனால் இப்போது நமது மாணவர்கள் பழகிவரும் வழியோ நமது தேசத்துக்குத் தகுதியற்றதாகவிருக்கிறது. இப்படியே நிலைத்துவிட்டாரானால், நம்தேசத்திலோ இதர தேசத்திலோ இதரருக்கு ஊழியம்செய்யப்போவதற்குத் தலைப்பட்டு நிற்பார்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை. அப்போது நம்மேல் மற்றவர் ஆரோபித்துவைத்துள்ள "அடிமைப்பட்டம்" இன்னும் உறுதியடையும்.

இப்போதிருக்கும் பெரியோர்களிற் பெரும்பாலாரும் நாம் முன்சொன்ன வழியிலேயே நின்றிருக்கிறார்களாதலால், அவர்களது குணங்களைப்படிந்துள்ள மாணவர்களையும் அவ்வழியே வளரவிட்டோமானால், நமது உத்தேசம் ஒருகாலும் கைகூடாது. ஒவ்வொருமாணவனும் தனக்குற்ற குணத்துடனேயே எதிர்கால இந்தியாவை நடத்தப்போகிறான்; ஆதலால், அவனது குணங்களைச் சீர்படுத்தினால் எதிர்கால இந்தியாவும் சீர்பெறும்.

இப்போதிருக்கும் இந்தியமாணவர்களின் சமுதாய குணங்களைக் கவனித்தோமானால், எதிர்கால இந்தியாவும் எவ்விதமாக அமையக்காத்திருக்கின்றது என்பதை யூகித்தலாகும். ஆக, எதிர்கால இந்தியாவை எவ்விதம் அமைக்கவேண்டுமென்று கருதுகிறோமோ, அவ்வித அமைப்புக்கேற்ப நமது தற்போதைய மாணவர்களைப் பயிற்றிவருவதே சால்புடைத்தாகும். எதிர்கால இந்தியா, பிறதுணையைப் பெரிதும்பெறாமல் தானேநிற்கும்படியமைக்கவேண்டுமானால், நமது மாணவருக்கு நமது தேசாசார தேசாபிமானங்களுடன் பயிற்றப்பெறவேண்டியதவசியமேயாகும். இச்சிறுபோழ்திலேயே தேசாபிமானம் போதிக்கப்பெறாவிடில், அம்மாணவனுக்கு இந்தப் பிறப்பில் அந்த அபிமானம் ஊன்றி நிலைபெறுமென்பது திண்ணமேயாகும். பலகால அடிமைப்பழக்கத்தினால், மாணவர்க்குத் தேசாபிமானவழியில் ஒருவிதமான நடுக்கம் தோன்றியிருந்தது என்றாலும், இப்போதிருக்கும் உத்வேகத்தினால் அந்நடுக்கம் குறைந்துகொண்டு வருகிறது. ஆகையினால் இதுவேசமயம், நமது மாணவரது கண்களைத் திறந்துவிடுவதற்கு என்று எண்ணுகிறோம். தாமதித்தோமானால், தாமதத்துக்குத்தக்ககாலம் பின்னாலும் முன்னேற்றத்திலும் நீட்டித்துக்கொள்ளப்பெறும். நமது ராஜாங்கத்தாரும் தற்காலமுண்டாகப்போகும் மாறுதலுக்கு ஏற்ற சாதகங்களையும் செய்து தந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது நமது மாணவரை அம்முறையிற் பயிற்றாமற்போனால், நமது தேசாபிமானிகள் முயன்று செய்து கொண்டுவரும் பெரிய சீர்திருத்தம் கைகூடிவரும்போது, அதனை வஹிக்கத்தக்கவர்களைத் தேடவேண்டியபடியாய்விடும். எந்த நாடும் அந்த நாட்டு ஜனங்களாலேயே முன்னேறியிருக்கிறதாகக் கவித்தி

சங்கள் முறையிடுகின்றனவேயன்றி. மற்றொரு நாட்டாரால் முன்னுக்குவந்திருப்பதாகக் காணப்பெற்றிலோம். எனினும், நமக்கு இப்போது பிறநாட்டாரும் நமது தேசமுன்னேற்றத்திற் சாதகவழியைக் காட்டிவருகிறார்கள். ஆகையினால் இதுவே சமயமென்றும் சொல்லும்படியிருக்கிறது.

நமது இளைஞரும் தற்காலம் நடந்துகொண்டுவரும் உத்வேகங்களால், தமது தேசம் இப்போதிருக்கும் நிலைமையையும் இனி அது அடையக்காத்திருக்கும் நிலைமையையும் நன்றாய் அறிந்தேயிருக்கிறார்கள். தேசம் தனது கால்களாலேயே நின்று தீரவேண்டும் என்னும் செழிப்பான பயிர்க்குப் புழுக்களும் விட்டில்களுமாகப் பலர் புறப்பட்டிருந்தபோதிலும், வானும் காற்றும் வளரப்போதும் பாங்குபெற அமைந்திருக்கும்போது அற்பாயுளுடைய புழுக்களாலும் எங்கும் நிலைத்திராத விட்டில்களாலும் ஏற்படும் தீங்குகள் நீக்கப்பெறும் என்பதிற் சந்தேகமில்லை. மாணவர்களிலேனும் மனிதத்தன்மையை யடைந்தவர்களிலேனும் தேசவுண்மையை யறியாதவர் இருப்பாராயின், அவர்கட்குப் பல முறையும் போதிக்கவேண்டுவதவசியமேயாகும். ஒரு அரச குமாரன் தனது அறியாப்பருவந்தொடங்கி ஒரு தாழ்ந்தவன்வீட்டில் வளர்க்கப்பெற்றுவரும்போது அவனது இயற்கைக்கு அநுகுணமான ஆற்றல் அவனுக்கு அமைந்திருந்தாலும், அவன் தானாகவாவது மற்றொருவராலாவது தனது உண்மையை அறிந்துகொண்டாலல்லாமல், ஏற்றத்தை யடையமாட்டான். அவனுடைய இயற்கைக் குணங்களையும் அவனது தேக அமைப்புக்களையும் அவனது சொத்துப் பற்றுக்களையும் அவனது வம்சஸ்தர் குணம் குறியாற்றல்களையும் எடுத்து அடிக்கடி உபந்யசிக்கவேண்டும்.

மாணவர்கட்கும் பள்ளிக்கூடப்பாடங்களில், சுதேச இயற்கையமைப்பு, சுதேச ராஜ்யங்கள், சுதேச பூர்வ சரித்திரம், சுதேச ஆசாரங்கள், சுதேசப் பெண்மணிகளின் சரித்திரங்கள், சுதேசராஜ சரித்திரங்கள், அவர்களது வீரங்கள் முதலியவற்றைச் சுதேச முறையிலேயே போதிக்கவேண்டும். இடையிடையே முற்கால தற்கால வித்தியாஸமுறைகளையும் அவையுண்டான காரணங்களை

யும் அக்காரணங்கள் தீர்க்கப்படவேண்டிய முறைகளையும் பசுமரத்தாணியெனப் பதியவைக்கவேண்டும்.

தற்போது நடக்கிற யுத்தத்தில், இங்கிலீஷ் சர்வகலாசாலைகள் தமது மாணவர்களையனுப்பித் தேசத்துக்கு உழைக்கும்படியாகச் செய்துகொண்டிருக்கின்றன. அம்மாணவர்கள் தமது தேசத்தின் பெருமையையும தமது முன்னோர்களின் பெருமையையும் அறிந்துகொள்ளும்படி கற்பிக்கப்பட்டிருந்ததனாலன்றோ தேசாபிமானமும் ராஜாபிமானமுங்கொண்டு முனைந்து யுத்தம் செய்கிறார்கள்! சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றுயிர்களுக்குத் தாம் எடுத்துக்கொண்ட தேஹங்களாலடையவேண்டிய பயன் தேசாபிமானத்தில் இதனைக் காட்டிலும் வேறுண்டோ? நமது இந்திய மாணவர்கட்கோ தமது தேச உடையையும் நடையையும் உண்டியையும் மாற்றிக்கொள்வதற்கும் தேசநன்மையை முற்றும் மறப்பதற்கும் எந்தவிதத்திலேனும் வயிற்றுச்சோற்றுக்கு உழைப்பதற்குமே பழக்கங்கள் செய்து கொடுக்கப்பெறுகின்றன.

பாலியவயதிலேயே ஞாபகம்வந்ததுமுதல் தேசமுன்னேற்றத்தின்வழிகளைச் சீராகக் கற்றுத்தெரிந்துகொண்டாலல்லவா, தமது தேஹமும் மனமும் நன்றாய் வேலைசெய்யும் யௌவனகாலங்களில், தக்கவுதவிகளைசசெய்ய முன்வருவார்கள்! அன்றியும் தற்போதைய பெரியயுத்தத்தில் ஏகாதிபத்தியத்துக்குத் தக்க உதவியைச்செய்யும் விஷயத்தில் நமது மாணவர்களையனுப்புவதற்கு யோசனையே பிறக்க மாட்டாதிருப்பதற்குக் காரணம், மாணவர்கள் அவ்விஷயத்தில் ஊற்றங்கொள்ளத்தகுந்த பழக்கம்பெறாததேயன்றி வேறென்ன? தவிரவும், நமது ஏகாதிபத்தியம் சௌக்கியமாக வாழவேண்டுமென்றாலும், இந்தியாவினுடைய நல்வாழ்வையன்றோ கருதவேண்டியிருக்கிறது! ஏனெனில் இந்தியாவில்லையெனின், ஏகாதிபத்தியத்துக்கு யாதொரு சிறப்புமில்லையென்பது யாரும் அறிந்தவிஷயமே. ஆகையினால் இந்தியா சுயேச்சையை அடைந்தாலல்லாமல் ஏகாதிபத்தியம் சுயேச்சையையனுபவிக்கமுடியாதென்றே துணிவாகச் சொல்லலாம்.

அன்றியும், தற்காலம் இந்தியமாணவர்க்குண்டாயிருக்கும் கற்காலம்போல வேறெந்நாட்டுமாணவர்க்கும் உண்டாகவில்லை

யென்றே சொல்லலாம். ராஜாபிமானமும் தேசாபிமானமும் ஒருமிக்கக் காட்டத்தகுந்தது இக்காலமே ஆம். இவ்விரண்டுங்கலந்து ஒன்றாகக் கொள்ளப்பட இருக்காமல், தற்போது தேசத்துக்காகத் தேசவுழைப்பிலும் அரசர்க்காக யுத்தவுழைப்பிலும் தமது உதவியைச் செய்துதரத்தக்க காலம் ஏற்பட்டிருக்கிறது. இதுவன்றி நமது அபிமானத்தைக்காட்டுவதற்குத்தக்கதான வேறுசமயம் ஏது? இச்சமயமல்லாமல் வேறு எச்சமயத்தில் அரசாங்கத்தார் நம்மிடத்திலிருந்து உயர்ந்த உதவியை எதிர்பார்க்கப்போகிறார்கள்.

ஒரு உண்மையான மனிதன் தனது தேசத்திற்காவது தனது ஜனங்களுக்காவது தனது அரசனுக்காவது வேண்டிய சமயங்களில் தனது உடல் பொருள் ஆவிகளுள் ஒன்றையேனும் எல்லாவற்றையுமேனும் தியாகம்செய்து உதவியைச்செய்ய முன்வராமற்போனால் அவனது பிறப்பின்பயன்றான் யாது? அவனுடைய ஆத்ம கடமையைச் செய்துவிட்டதாக முடியுமா? கடமையைச் செய்யாவிட்டாற் பிறப்பின் முடிவை யடைந்தவனாவனா? தேகபலத்தைத் தியாகம் செய்துதவுவோர்களும் மனோபலத்தை த்யாகம் செய்துதவுவோர்களும் உண்டென்று கொண்டாலும், இருவர்க்கும் இரண்டிலும் பழக்கமிருக்கவேண்டுவ தவசியமே. அவரவரது இயற்கைக்கு ஏற்றபடி இரண்டில் ஒன்று பிரதானியத்தை யடைந்திருந்தபோதிலும், மற்றொன்றும் அதற்கு உதவியாயிருக்கவேண்டுவ தவசியமே யாகும். ஆகையினால், தனது தேசத்துக்காவது தேச ஜனங்கட்காவது அரசனுக்காவது தான் தனது கடமையைச் செய்யவேண்டுமென்று எண்ணுகிற ஒரு மாணவன் தனது தேசத்தைப்பற்றியாவது தனது தேசஜனங்களைப் பற்றியாவது தனது அரசர்களைப் பற்றியாவது தெரிந்துகொள்ளாதிருக்கும்வரையில் உழைப்பில் உயர்வனா? அவனை யுழைப்பிற் செலுத்தின்போதிலும் விலங்கொத்திருப்பனேயன்றி வேறெங்ஙன மியலும்? அதனால், உள்ளத்திற் பதியும்படி மேற்சொன்னவை கற்பிக்கப்பெறல்வேண்டுமாயின், கல்லூரியில் மாணவனாயிருக்கும் காலமே தக்கதாகும். ஆகையினால், தேசாபிமானம் ஜனாபிமானம் ராஜாபிமானம் இவற்றிற் பழகும்படி தேச சரித்திரங்களையும் தேச ராஜசரித்திரங்களையும் தேச வீர சரித்திரங்களையும் சுதேச முறையிலேயே கற்பித்தல் வேண்டுமென்று இன்னொருமுறை வற்புறுத்துகிறோம்.

பத்திராதிபர்.

# பம்பாய் ஜீவகாருண்ய பீண்டு.

309, ஷராப் பஜார், பம்பாய். 2.

ஹானரரி மானேஜர் லல்லுபாய் குலாப்சண்ட் ஜாவெரி அவர்களிடமிருந்துவந்த கடிதம்.

மாட்சிமைதங்கிய தார் ராஜா
ஸாஹேப் அவர்கட்கு.

*மாட்சிமைதங்கிய மஹாராஜா!*

பம்பாய் ஜீவகாருண்யபண்டிற்குச் சம்பந்தப்பட்ட சங்கத்தார்களும் வேலைக்காரர்களும் அபிமானிகளுமான கீழ்க் கையொப்பமிட்டிருக்கும் நாங்கள், கீழ்க்குறிப்பிட்டிருக்கும் விஷயங்களைத் தங்களது அன்பும் அபிமானமும் பொருந்திய மாட்சிமை தங்கிய ஆலோசனைக்கு மனுப்பண்ணிக் கொள்கிறோம்.

தங்களது பெருமைதங்கிய அரசாட்சியின்கீழே தங்கியிருக்கும் மனிதகோடிகள், அமைதியையும் ஆனந்தத்தையும் நீதியையும் எப்போதும் பெற்றுச் சுகமாக வாழ்ந்திருக்க, மற்ற எளிமையும் பேசசமையும் உதவியற்றுமிருக்கிற எருது காளைக்கன்று ஆடு முதலிய பிராணிகள் தசரா முதலிய உத்ஸவகாலங்களில் அழிக்கப்பெற்று வருந்துவதுடன், தங்கள் குடிகளிலேயே பெருந்தன்மையாய்த்தவர்கட்கும் அதிருப்தியையும் வருத்தத்தையும் கொடுத்துக்கொண்டிருக்கிறதாக அறிகிறோம்.

இந்த வழக்கம் மிகவும் கொடுமையும் மதசம்பந்தமில்லாததுமானதென்று இந்துமத போதகர்கள் பலமுறையும் பல இடங்களிலும் சொல்லியிருக்கிறார்களென்றும், அதைப்பநுசரித்தே சுமார் 200 இரக்கமுள்ள சுதேசராஜர்க்கள் இந்தக்கெட்டவழக்கத்தை அறவே நிறுத்திவிட்டார்களென்றும் மாட்சிமைதங்கிய தாங்கள் அறிந்திருக்கலாம். பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரியஸ்வாமிகள், கோஸ்வாமி மஹாராஜா அவர்கள் முதலிய ஸாதுக்களுடையவும் மற்றுமுள்ள பண்டிதபோதகர்களுடையவும் அபிப்பிராயத்துக்கிணங்கவும் பட்சபாதமில்லாமல் எல்லாவித ஜீவகோடிகளையும் ஒருமனதுடன்படைத்துள்ள கருணையேயுருவமான எல்லாம் வல்லஇறைவனது நியாயக்கண்கட்கும் இணங்கவும் இவ்வழக்கம் மிகுந்த கொடூரமான தொன்றென்றுதள்ளப்பட்டிருக்கிறதென்றும் மாட்சிமைதங்கியதாங்கள் அறிந்திருக்கலாமாதலால், கருணையுடைய தாங்களும் இவ்வழக்கம் தகுதியற்றதென்றே எண்ணுவீர்களென்றும் நிச்சயமாக நம்புகிறோம்.

எங்களுடைய வினயத்துடன்கூடிய மனுவுக்கிரங்கி, மாட்சிமை தங்கிய பரோடா கைக்வார் அவர்களும் தங்களது மாகாணங்களில்

நவராத்திரி தசரா முதலிய காலங்களிலும் இக்கவிதமான பிராணி வதையை எக்காரணம்பற்றியேனும் செய்யக்கூடாதென்று விலக்கி யிருக்கிறார்கள். அதேபோலவே, மாட்சிமைதங்கிய ஜூனாகட் நவாப் ஸாஹெப் அவர்களும் பவாநகர், வெங்கனர், டான்ஸ்டா, காம்பூர் முதலிய சுதேச மஹாராஜாக்களும், கொண்டால், மோர்வி, ராஜ் கோட், லிம்ப்டி, வாதவான், லாகதார் முதலிய அநேக மாகாணங் களின் தாகூர் ஸாஹெப் அவர்களும தசராக்காலங்களில் இந்தப் பிராணிவதை செய்யப்படாதென்று தடுத்திருக்கின்றார்கள்.

மாட்சிமைதங்கிய தாங்களும் எங்களுடைய விநயபூர்வகமான இந்தமனுவைக் கண்ணியத்துடன் அங்கீகரித்து, மனிதசாதியாருக்கு உழுதொழிலுக்கு உழைப்பாளிகளாகவும், பால் தயிர் வெண்ணெய் நெய்முதலிய உத்தம போஜன பதார்த்தங்களைச் சளிக்காமல் அளிப் பதில் வள்ளன்மையுடையவைகளாகவும் இருந்து தீங்கென்பதை ஒருபோதும் நினையாத மகோபகாரிகளான எளியபிராணிகளை எவ் விதத்திலும் வதைசெய்யப்படாதென்று தங்களுடைய எல்லாமாகா ணங்கட்கும் ஒருபொதுவான தாக்கீது பிறப்பிக்கும்படியும் அந்தத் தாக்கீதை எந்தச்சமயத்தும் எந்தக்காரணத்தைமுன்னிட்டும் ரத்து செய்யாமலிருக்கும்படியும் மிகவும் வணக்கத்துடன் வேண்டிக் கொள்கிறோம்.

தங்கட்கு யாங்கள்கொடுத்துள்ள இந்தச்சிரமத்தையும் மன்னி த்து எங்களையும் பலத்துடன் கூடினவர்களாகும்படி கவுரவிப்பீர்க ளென்றும் நம்புகிறோம்.

தங்களுக்குக் கீழ்ப்படிதலுள்ள ஊழியர்கள்:

1.. பாலசந்திரக்ருஷ்ண (Sir, Kt., L. M., J.P.)

2. B. G. ஹார்னிமான் (Editor. பாம்பே க்ரானிகல்)

3. நரோத்தம மோரார்ஜிகோகுலதாஸ், (J. P, E-X Sheriff, City of Bombay.

4. மதுராதாஸ் விசான்ஜி கிம்ஜி.

5. வாலான்ஜி ட்ரிகாம்ஜி-மூல்ஜி, (Sir, Kt., J. P.)

6. பாலகங்காதர திலகர்.

7. லலுபாய் ஸாமல்தாஸ் மேடா, (C. I. E, Member, Bombay Legislative Council.)

8. ஜீவன்லால் பன்னலால், (President, the jain Association of India & jeweller to H. H. The Nizam)

முதலிய 41 பெயர்கள்

பத்திராதிபர்.

# மதுரைத் தமிழ்ச்சங்க வரலாறு.

"என்றுமுள தென்றமிழியம்பியிசை கொண்டான்" என்று கம்பநாடர் கூறியவண்ணம் அகத்தியம் என்னும் இலக்கணநூலைச் செய்து தமிழ்முனியெனச் சிறப்புப்பெயரைப்பெற்ற அகத்தியமுனிவர்காலந்தொடங்கிப் பல வித்துவான்களாலும் சேர சோழ பாண்டியரென்னும் தமிழ்மூவேந்தர்களாலும் வளர்க்கப்பெற்ற நமது தாய்மொழியாகிய தமிழ் அவ்வரசர்காலத்திற்குப் பின்னர்ச் செந்தமிழ்நாட்டுப் பெரும்பகுதியை அரசாட்சிபெற்ற சேதுவேந்தராலும் அவர் வமிசத்தினராலும் இன்றளவும் வளர்க்கப்பெறுதல் உலகறிந்த விஷயம். இச்சேதுவேந்தர்களுள் ஒருவராயும் வரையாதுகொடுக்கும் வள்ளலாயும் விளங்கிய ஸ்ரீமத் முத்துவிஜயரகுநாதபாஸ்கரசேதுபதியவர்கள் காலத்தில் அம்மன்னர்க்குப் பெரியதகப்பனார் குமாரரும் ஈவிரக்கம், பச்சாத்தாபம், இன்சொல், கல்வி, கேள்வி, அறிவுடைமை, தமிழபிமானம் முதலிய நற்குணங்கள் பல பொருந்தியவரும், பாலவனத்தம் ஜமீந்தாருமாகிய ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத்தேவரவர்களால் முன்சங்கமிருந்த இடமாகிய மதுரையின் கண்ணே ஸ்தாபிக்கப்பெற்றுத் தமிழ்வளர்ச்சிக் காதாரமாய்விளங்குகின்ற மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்வரலாற்றைச் சுருக்கமாகவரைகின்றேன்.

இச்சங்கஸ்தாபகராகிய ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத்தேவர் தமிழறிஞர்க்குப் பெரும்பொருளுதவிச் செந்தமிழ்ப்பெருநூல்கள் வெளியிடுவித்தவரும், புலவர்குழாத்துள் வீற்றிருந்து தமிழாராய்தலையே பேரின்பமாகக்கருதியவரும், நாடெல்லாம் புகழ்பெற்ற இராஜ்யதந்திரநிபுணருமாகிய இராமநாதபுரம் ஸ்ரீமான் பொன்னுச்சாமித்தேவரவர்களுக்கு இளையகுமாரராக அக்ஷய வருஷம் பங்குனி மீ கூஉ (1867 வருஷம் மார்ச்சு மீ 21 உ) ஜனனமானார். உக்கிரபாண்டியனென்பது இவரது இயற்பெயர். இவர் உரியவயதிலே அக்ஷராப்பியாசஞ்செய்யப்பெற்றுத் தமிழிலும் ஆங்கிலத்திலும் தேர்ச்சியடைந்து, காளைப்பருவத்தில் தமக்குரிய பூஸ்திதியை ஒப்புக்கொண்டு பாலவனத்தம் ஜமீந்தார் என்னும் பட்டம்பெற்று, இராமநாத

புரத்திலே சோமசுந்தரவிலாசம் எனப் பெயரியதொரு ராஜமாளிகை நிருமித்து, அதிலே வீற்றிருந்து தமிழாராயத்தொடங்கினர். இவ்வாராய்ச்சியினாலே இவர்க்குத் தமிழிலே பூரண ஞானமும், அதனை வளர்க்கவேண்டுமென்னுமாசையும், வித்துவான்களிடத்து மதிப்பும் உண்டாயின. ஆனால், அதுவோ இவ்வுலகத்தார் பலகாரணங்களாலும் தம்மருமைத் தாய்மொழியாகிய தமிழைக் கைவிடுங்காலமாயிருந்தது.

இப்படியிருக்கையில், சென்னைமாகாணக் கூட்டம் ஒருமுறை மதுரைமாநகரிற் கூடிற்று. அதற்கு விஜயஞ்செய்திருந்த அறிஞர் பலரையும் ஒருங்குகூட்டி, ஒருபேரவைதொகுத்து 'எவ்வாற்றாற் றமிழை வளர்க்கலாம்' என ஆராய்ந்து தேர்ந்து பிலவஞு வைகாசிமீ ௰௧௳ (24—5—1901) மதுரை சேதுபதி ஹைஸ்கூலைச் சேர்ந்ததொரு கட்டிடத்தில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தை ஸ்தாபித்தார். அப்பொழுது இவருக்கு வயது 34. அதுமுதல் இம்மஹான் தம் உடல் பொருள் ஆவியென்னும் மூன்றையும் இத்தமிழ்ச்சங்கத்திற்கே தத்தம்பண்ணி அல்லும் பகலும் உழைப்பாராயினர். அதன் பலனாக ஒரு வித்துவக்கழகமும், 25-மாணவர்களுக்கு உண்டி உடை முதலியன கொடுத்து உயர்தரச் செந்தமிழ்க்கல்வி கற்பிக்கத்தக்க கல்லூரி ஒன்றும், புத்தகசாலை ஒன்றும் 4-மாசத்திற்குள் ஏற்பட்டன. ஒருவருஷம் சென்றவுடன் (29—8—1902-ல்) தமிழபிவிருத்திக்கு வேண்டிய நூல்கள் பலவும், ஒரு மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகையும் அச்சேறி வெளிவரும்பொருட்டு அச்சுக்கூடம் ஒன்று நிறுவப்பெற்றது. அதன்பின்னர், சுபகிருது ஞு கார்த்திகைமீ தொடங்கி மாதந்தோறும் செந்தமிழ் என்னும் பெயருடன் சிறந்த தமிழ்ப் பத்திரிகை வெளிவரலாயிற்று. அன்றியும், ஆங்கில கலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷை, தனித்தமிழ்ப்பரீக்ஷை என இருவகைப் பரீக்ஷைகள் வருடந்தோறும் நடத்துவதென்ற தீர்மானமும் ஆயிற்று.

இவ்வாறமையப்பெற்ற தமிழ்ச்சங்கத்தின்செலவுக்காக மாட்சி பொருந்திய பாஸ்கரசேதுபதியவர்கள் தமது சமஸ்தான தரும மகமைநிதியிலிருந்தும் தேவஸ்தானநிதியிலிருந்துமாக மாதமொன்

திற்கு ஐந்நூற்றைம்பதுரூபாய்வீதம் என்றுங்கொடுத்துவரச் சாஸனம் அளித்து அவ்வாறே உதவலானார்கள். அப்பொருளுதவி கொண்டு நடைபெற்றமையால், சங்கத்தின் பிரதான அங்கமாகிய கலாசாலை 'சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை' எனப் பெயர்பெற்றது. திருவனந்தபுரம்; பரோடா, தர்பங்கா, மைசூர், கொச்சி முதலிய சமஸ்தானாதிபதிகளும் சங்கத்திற்காகச் சிறிது பொருளுதவிசெய்தார்கள். தமிழ்நாட்டிலுள்ள ஜமீந்தார்கள் பலரும், பிரபுக்களிற் சிலரும் தங்களுக்கிஷ்டமான மூலதனமும், மாதச்சந்தாத்தொகையும் கொடுத்துதவ முன்வந்தார்கள். தனித்தமிழரசாகிய மாட்சிமைதங்கிய **H. H.** புதுக்கோட்டை மஹாராஜா அவர்கள் ரூ. 5000 நன்கொடையளித்ததுமன்றி 1904௵ அக்டோபர்மீ முதல் இச்சங்கமுள்ளளவும் மாதச்சந்தா ரூ. 50 உதவிவருவதாகச் சாஸனமளித்து அவ்வாறே யுதவிவருகிறார்கள். இவ்வுபகாரநிதியினின்றும் சங்கத்தார் வருஷந்தோறும் நடத்திவரும் சங்கப்பரீக்ஷைகளில் முதன்மைபெறத்தேறும் மாணாக்கர்களுக்குப் புதுக்கோட்டை மஹாராஜா அவர்கள்பெயரால் தோடாமுதலிய பரிசுகள் அளிக்கப்பெறுகின்றன.

இவ்வணம்திரவியசகாயம்பெற்று நடந்துவருதற்கிடையே மஹோபகாரியாகிய கனம் பாஸ்கரசேதுபதி மன்னரவர்கள் சோபகிருது௵ மார்கழிமாசத்திற் சிவபதமடைந்தார்கள். அடையவே அச்சமயம் இளவரசர் மைனராயிருந்தமையால் மேற்படி சமஸ்தானத்திலிருந்து சங்கத்திற்குக் கொடுத்துவந்த தொகைக்கு மைனர் வியாச்சியமேற்பட்டால் தமது சொத்திலிருந்து ஈடுசெய்வதாக ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவரவர்கள் எழுதிக்கொடுத்ததின்மேல், மேற்படி தொகையில் ஒருபாகம் மாத்திரம் அச்சமஸ்தான மேற்பார்ப்பவர்களாற் கொடுக்கப்பட்டுவந்தது. இதனிடையே 1908௵ முதல் இத்தமிழ்ச்சங்கம் இந்தியா கவண்மெண்டின் 1860ம்௵த்து 21-வது சட்டத்தின்படி பொதுத்தருமஸ்தாபனங்களில் ஒன்றாகப் பதிவுசெய்யப்பெற்று இதன் காரியநிர்வாகத்தின் பொருட்டுப் பதினொருவரடங்கிய நிர்வாகசபை யொன்றும் ஸ்தாபிக்கப்பெற்றது.

இவ்வண்ணம் நிகழ்கையில் இளவரசராயிருந்த ஸ்ரீமது ராஜ ராஜேச்வர முத்துராமலிங்க சேதுபதி 1910 ௵ பட்டத்திற்கு வந்தார். இவர் தமிழிலே நல்லஞானமும் அதனைவளர்க்கவேண்டுமென்னு மவாவும் உடையராயிருந்தும் எக்காரணத்தாலோ, தமது ஸம்ஸ்தானத்திலிருந்து கொடுத்துவந்த தொகையை நிறுத்திக்கொண்டது மன்றி, அதற்குமுன்னே ஸம்ஸ்தானத்திலிருந்து சங்கத்திற்குக்கொடுக்கப்பட்டுள்ள தொகைக்கெல்லாம் திரும்பத் தமக்குக்கிடைக்கவேண்டுமென்று வியாச்சியமுந் தொடர்ந்தார். தொடரவே சங்கத்தலைவரின் நண்பர்களிற் பலரும், "பெருஞ்செலவுக்கிடமாயிருக்கிற கலாசாலையை நிறுத்திவிடவேண்டும்" என்று யோசனைசொல்ல ஆரம்பித்தார்கள்; ஆனால், கலாசாலையே சங்கத்திற்குப்பிரதானம் என்பது தலைவரின் அபிப்பிராயமாதலால், ஈசனைநம்பி அதனை ஒருவாறு நடத்திவந்தார்.

இஃது இங்ஙனமிருக்க ஆண்டிபட்டி ஜமீந்தாரும் தமிழ்வளர்க்க வந்த வள்ளலுமாகி விளங்குகின்ற, ஸ்ரீமான். சா. ராம. மு. சித. பெத்தாச்சிசெட்டியாரவர்கள் 1911 ௵ மே௴ நடந்தேறிய பத்தாவது வருஷக்கூட்டத்திற்கு விஜயஞ்செய்து, அங்கே திரவியசகாய விஷயமாகச் சபையார்க்குச் சங்கத்தலைவர்கூறிய குறிப்புமொழிகளையும், அத்தலைவரின் ஆப்தரும் சங்கத்துக் கௌரவகாரியதரிசியாயின்றளவும் நிருவகித்துவருகிற மஹோபகாரியுமாகிய ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள் எடுத்துரைத்த வெளிப்படை மொழிகளையுங்கேட்டு மனமுருகி உடனே நன்கொடை ரூ 1000 கொடுத்ததுமன்றி அதுமுதற் கலாசாலையின் செலவுக்காக மாதச் சந்தா ரூ 50 கொடுப்பதாகவும்* வாக்களித்தார்கள். காலத்தினாற் செய்த இப்பெருநன்றியைச் சங்கத்தலைவர் அன்புடன் ஏற்று, அவ்வுபகாரியைப் பார்த்து "அன்பார்ந்த பெத்தாச்சி! நீரே இனி இச்சங்கத்திற்குப் பெற்றாச்சி" என்று மனமாரமொழிந்து வாழ்த்திச்

* வாக்களித்த அளவில்நில்லாமல் இப்பெருந்தகையாளர் ௴1க்கு ரூ 50 வீதம் ஒருவருஷத்திற்குள்ள ரூ 600-ம். முன்பணமாகக்கொடுத்துவருவது உலகம்பாராட்டத்தக்கது.

சின்னாள் வசித்துவிட்டு விரோதிகிருதுவரு கார்த்திகைமீ ௰௭வ (2—12—1911) இவ்வுலகவாழ்வை நீத்து என்றுமழியாச் சிவபதமடைந்தார். அடையவே (சேதுபதிமன்னரவர்கள் 'அக்கிராசனாதிபத்தியம் வகிக்கமாட்டோ'மென்று மறுத்துவிட்டதனால்) அச்சமயம் உபஅக்கிராசனாதிபதியாயிருந்தவரும் மதுரைப் பிரபல வக்கீல்களுள் ஒருவருமான ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய ஐயரவர்கள் அக்கிராசனாதிபதியாகவும், ஸ்ரீமான் பெத்தாச்சிசெட்டியாரவர்கள் உபஅக்கிராசனாதிபதியாகவும் அமர்ந்தார்கள். இதன்பின்னர், சங்கத்து நிர்வாகசபையார்கூடிச் 'சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை' என்றதை மாற்றித் 'தமிழ்ச்சங்கக்கலாசாலை' எனக் கலாசாலைக்குப்பெயரமைத்தார்கள். இவ்வணம் இரண்டுவருஷம் செல்வதற்குள் பிரமாதீசுவரு கார்த்திகைமீ ௯வ (24—11—1913) P. S. சுப்பிரமணியஐயரவர்களுடைய காலமும் ஆகிவிட்டது.

அதன்பின்னர் மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் இராஜா ஸ்ரீமது முத்துவிஜயரகுநாத ராஜராஜேச்வர சேதுபதியாகிய முத்துராமலிங்க சேதுபதியவர்கள் நண்பர்களுடைய வேண்டுகோட்கிரங்கி, முன் தொடர்ந்திருந்த வியாச்சியத்தை நிறுத்திக்கொண்டு பிரமாதீசுவரு கார்த்திகைமீ ௨௰௭வ (12—12—1913) மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் சாசுவத அக்கிராசனாதிபதியாகி, அதுகாறும் சங்ககாரியங்களிற் கண்ணுங்கருத்துமாயிருந்துவந்த சாசுவத உபஅக்கிராசனாதிபதி ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியாரவர்களையும், காரியதரிசி ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாசஐயங்காரவர்களையும் ஸ்ரீமது மஹாமஹோபாத்தியாய வே. சாமிநாதையரவர்களையும் உள்ளிட்ட நிருவாக சபையங்கத்தினர் பதினொருவருடனுங்கூடித் தமிழை வளர்க்க முன்வந்தருளினார்கள். அதிலிருந்து சங்ககாரியங்களெல்லாம் நன்கு நடைபெற்றுவருகின்றன. எனினும் கலாசாலைக்காரியம் மட்டும் நன்கு கவனிக்கப்படாமலிருந்துவருகின்றது. முன்னெல்லாம் பாலபண்டிதவகுப்பு, பண்டிதவகுப்புகளிலும் பிள்ளைகள் படித்து முதன்மையாகத்தேறிப் பரிசுபெற்றிருக்க, சென்றவருஷத்திற் பிரவேச பண்டிதபரீக்ஷையில் மட்டும் ஐவர் இரண்டாவது

வகுப்பிற்றேறியிருப்பது விசனிக்கத்தக்கதா யிருக்கிறது. மேற்பரீக்ஷைகளுக்குப் பிள்ளைகளேயில்லை. இதற்குக்காரணம் பலவிருக்கலாமேனும், போதியவளவு உபாத்தியாயர்களின்மையே முகற்காரணமாம். இக்கலாசாலையில் உபாத்தியாயர்களுக்கு ஏற்படுத்தியிருக்குஞ் சம்பளம் மிகக்குறைவானதென்றே சொல்லலாம். தக்கசம்பளங்கொடுத்து வேண்டிய உபாத்தியாயர்களை நியமிக்கவேண்டும். பிள்ளைகளுக்குப் போஷணைத்திரவியம் உரியகாலத்தில் உதவப்பெறாமை இரண்டாவதுகாரணமாம். கலாசாலையே தமிழ்ச்சங்கத்திற்குப்பெருமையுண்டுபண்ணுவதாகும். இதிற்படித்தோர்களுக்கு வேலைகிடைக்குமோ கிடைக்காதோ வென்று ஆதிகாலத்திலிருந்த சந்தேகம்நீங்கிவிட்டது. இதில் இதுகாறும்படித்துத்தேறியவர்கள் எல்லாரும் தக்க வேலைகளிலமர்ந்து சங்கத்தைவாழ்த்திக்கொண்டு கௌரவமாக வசித்துவருகிறார்களென்பது 1917ஆ ஆகஸ்டுமீ 24-உ வெளியான மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினாறாம்வருடத்திய அறிக்கைப்பத்திரத்தினால் அறியக்கிடக்கின்றது. ஆகவே கலாசாலையானதுகூடத்தினாற் சங்கத்தார்க்குப் புகழும் புண்ணியமும் கிடைக்குமென்பது நிச்சயம். அக்கிராசனாதிபதியாகிய மாட்சிமைபொருந்திய சேதுமன்னரவர்களும் ஏனைய தனவான்களும் நினைத்தால் இஃதொரு பெரியகாரியமன்று. இவர்களெல்லோரும் இனிக் கிருபைகூர்ந்து ஆதரிப்பார்களென்றே நம்புகிறேன். அக்கிராசனாதிபதியவர்கள் கிருபைகூர்ந்து, தம்பிதா அளித்துவந்த தொகைமுழுவதையும் தாமும் அளிக்கமுன்வந்து பிதிருவாக்கியபரிபாலனஞ்செய்தால், கலாசாலை நன்கு நடைபெறுதற்கு அதுவே போதியதாகும்.

இப்பொழுது சங்கக்கட்டிடத்திற்காகவும் மூலதனத்திற்காகவும் தொகைகள் சேர்க்கப்பெறுகின்றன. இவ்விஷயத்தில் உப அக்கிராசனாதிபதியவர்களும் காரியதரிசியவர்களும் எடுத்துக்கொண்டிருக்குஞ் சிரத்தை அபரிமிதமானது. அதனால், நகரவைசிய ஸ்ரீமான்

கள் மனமுவந்து பொருளுதவிவருகிறார்கள். இத்தகையாரனைவர்க்கும் ஈசன் திருவருள் பெருகுவதாக. மதுரைத்தமிழ்ச்சங்கமும் அதன் சிரம்போல விளங்குகின்ற கலாசாலையும் புத்தகசாலைமுதலிய மற்றையங்கங்களும் நீடூழிவாழ்க.

இங்ஙனம்,
மதுரைத்தமிழ்ச்சங்கமாணவருளொருவனாகிய
அ. கோபாலையன்.

---

# விநோதக் கூற்று.

——:(o):——

கன்னியொடு பாலன் கலந்து சுகித்தனனாய்
ஒன்றிரண்டு மூன்று புதல்வனையே—நன்மகவைக்
கண்டாரோ ஈதும் கலிகாலக் காட்சியோ
உண்டாய மெய்ப்பொருளே ஓர். (1)

ஓராணும் பெண்ணும் உகந்து சுகித்தனராய்ப்
பேராணோ பெண்ணோ பிறப்பிப்பார்—தோராயோ
பெண்ணோடு பெண்ணுக் கொருபிறப்புப் பேருலகில்
உண்டான தென்னே உணர். (2)

எண்ணி விரல்வைத் திளம்பெண் படித்திடுதல்
கண்கூடாய் யாவருமே கண்டறிந்தோம்—மண்ணிடையே
மங்கை யதுபோல வாசிப்பள் பார்த்தனையேல்
எங்கறிந்தாய் நீதான் இசை. (3)

குறிப்பு:—மேலே கண்ட வெண்பாக்கள் படிப்பதற்கு விநோத முடையதும் உண்மைப்பொருள் உடையதும் ஆகும்.

1. கோபாலன், கன்னி என்னும் பெயருடைய தம்பதிகள் மூன்று குழந்தைகளுடன் இருக்கும் சம்பவத்தைப் பற்றியது.

2. மாது, என்னும் பெயருடையான் தன்மனைவியுடன் சுகமா யிருந்து ஒரு குழந்தையை அடைந்த சம்பவத்தைப் பற்றியது.

3. பக்குவமடைந்த ஒருபெண் ஹார்மோனியம் வாசிக்கும் சம்பவத்தைப்பற்றியது.

---

# அழகு

கல்விக் கழகு கசடற மொழிதல்
சொல்லுக் கழகு சொலின்வாய்மை—இல்லுக்
கழகாகும் கற்புடையாள் அன்பர்க் கழகு
பழகாத தேவஞ்சம் பார். (1)

பார்த்திபர்க்குச் செங்கோன்மை பார்க்கி னழகாகும்
கீர்த்திக் கழகு கொழுகொடையே—சீர்த்திபெறும்
செல்வர்க் கழகு செழுங்கிளையைத் தாங்கிடுதல்
எல்லார்க்குங் கல்வி அழ கே. (2)

ஏசா திருத்தல் இனத்திற் கழகாகும்
ஆசானுக் கன்பே அழகாகும்—கூசாமை
வேசிக் கழகாகும் வேண்டாமை யேயழகாம்
யோசிப்போர்க் கென்றே உணர். (3)

உணர்வோர்க் கழகாகும் உண்மைவழிச் சேறல்
குணத்தோர்க் கழகின்சொற் கூறல்—மணத்திற்
கழகு சுமங்கலியே ஆப்தற் கழகு
இழிவோரை அண்டியவர்க் கேட்பு. (கேட்பு-கேள்வி) (4)

கேட்புக் கழகு கெடுதி நினையாமை
பாட்டுக் கழகு பகரிசையே—தாட்டிகத்
தன்மைக் கழகு ,தவறாமை சாட்சிகளுக்
கன்மையுரை யாமை அழகு. (5)

A. R. ஸ்ரீனிவாஸமுதலியார்

ஆனைமலை.

# சுலக்ஷணா.

(397-ம் பக்கத் தொடர்ச்சி.)

## கூத்துக்கொட்டகை.

முந்தின அத்தியாயத்திற் சொல்லிய விஷயங்கள் நடந்து பத்தொன்பது வருஷங்களாயின. இந்த அத்தியாயத்தைச் சுவேதவதி நகரத்திலுள்ள ஒரு விஸ்தாரமான கூத்துக்கொட்டகையில் துவக்குகிறோம். அக்கொட்டகையில் ஜனங்கள் அதிக நெருக்கமாகக் கூடியிருந்தார்கள். அவர்களுள் அனேக ஜமீந்தார்களும் பிரபுக்களும் தங்கள் குடும்பங்களுடன் காணப்பட்டார்கள். அவர்கள் வைரம் சிவப்பு முதலிய நவரத்தினங்களாலாகிய விலையுயர்ந்த ஆபரணங்களை அணிந்திருந்தார்கள். கூத்துமேடையில் வேடதாரிகள் (Actors) நாடகமாடினார்கள். ஆக்டர்களிற் பெரும்பாலர் ஸ்திரீகள். ஆகையாற்றான் அந்நாடகத்திற்கு அவ்வளவு ஜனக்கூட்டம் வந்திருந்தது.

ஆதிகாலத்தில் அரிச்சந்திரபுராணம் ராமாயணம் முதலிய புண்ணிய சரிதைகளை, ஜனங்கள் காதினாற் கேட்பது மாத்திரம் போதாதென்று, அவைகளை நாடக ரூபமாகக் கண்ணாலும் பார்த்து நற்கதியை அடையும்படி அரிச்சந்திர நாடகம் ராமநாடகம் முதலியவற்றைப் பெரியோர்கள் ஏற்படுத்தினார்கள். அத்தகைய உயர்வான நாடகங்களும் தற்காலத்தில் விடபுருஷர்களும் நன்னடக்கையில்லாதவர்களுமே பார்க்கும்படி ஆகிவிட்டன. அவைகளில் யோக்கிதையுள்ள மனிதர்களும் மானமுள்ள ஸ்திரீகளும் கேட்கத்தகாதவார்த்தைகள் உபயோகிக்கப் படுகின்றன. எந்தநாடகத்தில் லக்ஷணமான ஸ்திரீகள் அதிகமாய்ச் சேர்ந்திருக்கிறார்களோ அதற்குத்தான் வரும்படியும் அதிகம்.

இது இவ்வாறாக, நாம் கதையைத் தொடங்குவோம். நாடகசாலையின் ஒருபக்கத்தில் நான்கு ஸ்திரீகள் இருந்தனர். அவர்கள் உயர்குலத்தைச் சேர்ந்தவர்களென்பதை அவர்களுடைய ஆடையாபரணங்களும் முகவசீகரமும் விளக்கிக்கொண்டிருந்தன. அவர்களுள் ஒருத்தியின்பெயர் அம்புஜம். அவளுக்குச்சுமார் பதினெட்டு வயதிருக்கும். நால்வரிலும் அவள்தான் அதிலக்ஷணமாயிருந்தாள்.

மற்றைய மூவரும் அவளுடைய தோழிகள். அம்புஜத்திற்குக் கலியாணமாகவில்லை; ஆனால் அவளுக்கு ஒரு கணவன் நிச்சயிக்கப்பட்டிருந்தான். அவன்தான் மதிமானாகிய புவனாலயம் ஜமீந்தார். அவனைப்பற்றிப் பின்பு பேசுவோம். அம்புஜத்திற்குச் சூடாமணி என்ற சகோதரனொருவனுண்டு. அவனுக்குச் சுமார் இருபத்தைந்து வயதிருக்கும், அவன் கெட்ட சிநேகிதர்களுடன் கூடிக் கெட்டுப்போனான். சூதாட்டம், கட்குடி முதலிய துர்வழக்கங்களை உடையவனும் விடபுருஷனுமிருந்தான். அவனுக்கும் விவாகமாகவில்லை அம்புஜமும் சூடாமணியும் தாய்தந்தையற்றவர்கள், ஆஸ்தியும் நாஸ்திதான், அவர்களுடைய அத்தை அவர்களுடன் வசித்துவந்தாள். தூரதேசத்திலிருந்த அவர்களது பெரியதகப்பனாகிய ஜமீந்தாரொருவர் அவர்களுக்குச் செலவிற்குப் பணம் அனுப்பிவந்தார். அவர்பெயர் விக்கிரமவர்மா. அவருக்கு வருஷத்திற்கு அறுபதினாயிரம் ரூபாய் வருமானமுள்ள கிராமங்களிருந்தன. அவருக்குப் பெண்சாதி பிள்ளைகள் இல்லாதபடியால், அவருடைய ஆஸ்தியெல்லாம், அவருக்குப் பிறகு சூடாமணியைச் சேரவேண்டியதாயிருந்தது.

அம்புஜத்திற்கு நிச்சயிக்கப்பட்ட கணவனாகிய புவனாலயம் ஜமீந்தாரான மதிமானுக்கு இப்பொழுது வயது பத்தொன்பது. அவன் அதிக அழகுடையவனாகவாவது கல்வியுடையவனாகவாவது இருக்கவில்லை. தான் ஒரு ஜமீந்தார் என்பதனாலும் தனக்கு ஏராளமான ஆஸ்தி இருக்கிறது என்பதனாலும், அவன் வீண்பெருமையும் படாடோபமும் உள்ளவனாயிருந்தான். அவனுடைய இருபத்தோராவது வயதில் ஆஸ்தியெல்லாம் அவன் ஆர்டருக்கு (Order) க்கு வருவதென்று ஒயில் (Will) எழுதப்பட்டிருந்தது. ஆகையால் அவனுடைய இருபத்தோராவது வயதில் அவன் அம்புஜத்தைக் கலியாணம்பண்ணிக்கொள்வதென்று நிச்சயிக்கப்பட்டிருந்தது. அம்புஜத்தின் சகோதரன் சூடாமணியும் மதிமானும் நல்ல சிநேகிதர்கள்.

அம்புஜம் நாடகசாலைக்குத் தனியாய் வரவில்லை. தன் சகோதரன் சூடாமணியுடனும், தனக்குக் கணவனாக நிச்சயிக்கப் பட்டிருக்

கும் மதிமானோடும் வந்தாள். அவர்களிருவரும் அம்புஜத்தைத் தோழிகளோடு விட்டுவிட்டு நாடகக்கணிகைகள் இருக்குமிடத்திற்குச் சென்றார்கள். ஒருமணிநேரம் கழித்து அவர்கள் மறுபடியும் அவளிருக்குமிடத்திற்கு வந்தார்கள்.

மதிமான், "அம்புஜம்! நாங்கள் இந்நேரம் உன்னை விட்டுப் பிரிந்து சென்றிருந்ததால் உனக்கு வருத்தமுண்டாயிருக்கலாம்."

அம்புஜம், "என்னுடைய சிநேகிதைகளுடன் நான்சந்தோஷமாய்க் காலத்தைக் கழித்தேன். ஆகையால் நீங்கள் போனதனால் வருத்தமொன்றுமில்லை."

சூடாமணி தன் தங்கையினிடத்தில் இரகசியமாய்ச் சொல்லுகிறான். "நீ மதிமானிடத்திற் பிரியமாய் நடந்து கொள்ளவேண்டும். இல்லாவிடில் ஒருவேளை அவன் உன்னைக் கலியாணம்செய்துகொள்ள மாட்டான்."

அம்புஜம் மதிமானுக்குக் கேட்காமற் சூடாமணியிடத்திற் சொல்லுகிறாள்:— "தாங்கள் என்னை என்னிஷ்டப்படி விடுவதாயிருந்தால், மதிமானை மணக்க எனக்கு மனமில்லை."

சூடாமணி பதிற்சொல்வதற்குமுன் மதிமான் சொல்லுகிறான். "ஆஹா! நாடகம் எவ்வளவு நேர்த்தியாயிருக்கிறது. என்சகோதரிகளுக்கும் என் தாய்க்கும் அதிருஷ்டமில்லை."

அம்புஜம், "உங்களுடைய தாயாரும் சகோதரிகளும் ஏன் இன்று நாடகத்திற்கு வரவில்லை?"

மதிமான், "என் தாய்க்கு நாடகங்களில் பிரீதி இல்லையாம். விமலாவிற்கு உடம்பு சௌக்கியமில்லை. அசிதா அவர்களுக்குத் துணையாயிருக்கிறாள். மேலும் இன்று காலையில் எனக்கும் என் தாய்க்கும் கொஞ்சம் சச்சரவுஏற்பட்டது. என் நடத்தையைப்பற்றி அவள் எனக்குப் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தாள். அவள் என் தகப்பனாரைக் கலியாணம்பண்ணிக்கொள்வதற்குமுன் ஒரு சாதாரணக் குடியானவன்மகள்தானே என்று நான் அவளுக்கு ஞாபகப்படுத்தினபோது என் தாய்க்குச் சொல்லமுடியாத கோபம் வந்துவிட்டது."

அம்புஜம், "தாயாருடன் இவ்விதமாகச் சச்சரவுசெய்தல் அழகாகுமா?"

மதிமான், "இல்லாவிட்டால் அவள் அடங்கமாட்டாள்."

இவர்கள் இவ்வாறு சம்பாஷணை செய்துகொண்டிருக்கையில் அப்பக்கம் வாலிபனொருவன் போய்க்கொண்டிருந்தான். அவன்பெயர் சிந்தாமணி. அவன் அயல்நாட்டிலிருந்து வந்தவன். சித்திரவேலையில் நல்ல சாமர்த்தியவான். சுவேதவதி நகரத்திலிருக்கும் பிரபுக்களின் குடும்பங்களிலுள்ள ஸ்திரீகளுக்குச் சித்திரமெழுதக்கற்றுக் கொடுத்து அதனால் வரும் ஊதியத்தைக்கொண்டு பிழைத்து வந்தான். அவன் இலக்ஷணமான உருவமுடையவன், சற்குண சம்பன்னன்; அவனுடைய வயது நிச்சயமாய் இத்தனை என்று சொல்ல முடியாது. பத்தொன்பதற்குமேல் இருபத்தொன்றிற்குள் இருக்குமென்று அவன் முகத்தைப்பார்த்தவர்கள் சொல்லக்கூடும்.

சிந்தாமணி எதிரே செல்வதைக்கண்ட மதிமான் அம்புஜத்தைப் பார்த்து, "அதோ போகிறானே சிந்தாமணி, அவனிடத்தில் தானே நீ சித்திரம் எழுதக் கற்றுக் கொள்ளுகிறாய்?" என்று கேட்டான். அம்புஜம் சிந்தாமணியைப் பார்த்ததும், முகந்துடைப்பவள் போலக் கைத்துண்டினால் முகத்தை மூடிக்கொண்டு சொல்லுகிறாள். "ஆம்; சிந்தாமணியிடத்திற்றானே தங்களுடைய சகோதரிகளும் சித்திரமெழுதக் கற்றுக்கொள்கிறார்கள்?"

சிந்தாமணி அப்பாற் சென்றதும், சுமார் ஐம்பது வயதுள்ள மனிதனொருவன் அங்கு வந்து சூடாமணியைப் பார்த்து, "ஐயா தாங்கள்தானே சூடாமணிப்பிரபு என்பவர்? நான் தூரதேசத்திலிருக்கும் தங்களுடைய பெரியதகப்பனாராகிய விக்கிரமவர்மாவினுடைய சினேகிதன். அவரிடத்திலிருந்து தங்களுக்கும் அம்புஜத்திற்கும் தங்கள் அத்தை நீலாம்பாளுக்கும் கடிதங்கள் வாங்கி வந்திருக்கிறேன்," என்று சொல்லிக் கடிதங்களைச் சூடாமணியிடத்திலும் அம்புஜத்தினிடத்திலும் கொடுத்தான்.

கடிதங்களைப் பிரித்துப் பார்த்தபொழுது அவைகளில், கடிதங் கொண்டுவருபவன் தன்னுடைய சினேகிதனென்றும், அவன்பெயர்

கங்காதரன் என்றும், அவன் வியாபாரஞ்செய்து பொருள் தேடி, பிறகு அத்தொழிலை விட்டுவிட்டவனென்றும் விக்கிரமவர்மா எழுதியிருந்தார். மேலும் கங்காதரனை அவர்களுடைய சிநேகிதனைப் பாவித்து நடத்த வேண்டுமென்றும் எழுதப்பட்டிருந்தது. கங்காதரன் அங்குக் கூடியிருந்த பிரபுக்களையும் ஜமீந்தார்களையும்போல் உயர்ந்த வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் தரித்திருக்கவில்லை. அவன் ஒரு சாதாரண மனிதனைப்போல் உடுத்தியிருந்தான்.

சூடாமணி, "நம்முடைய பெரியதகப்பனாருக்கு எப்பேர்ப்பட்ட சிநேகிதன் அகப்பட்டான். இவனுடன் நாம் எப்படிச்சிநேகிப்பது?"

மதிமான், "கங்காதரன்! பேஷ்! பேர் வெகுநன்றாயிருக்கிறது. சூடாமணி! வண்ணாத்தி தன் கழுதை இறந்ததும் 'கங்காதரா மாண்டாயோ, கங்காதரா மாண்டாயோ' என்று கூவியழுதகதை உனக்கு ஞாபகமிருக்கிறதா?"

அம்புஜம், "தாங்கள் இவ்வாறு கங்காதரனைக் கேலிசெய்யக் கூடாது. அவர் எப்படியிருந்தாலும் எங்கள் பெரியதகப்பனாரின் நண்பரல்லவா? அவரை மரியாதையாகவே நடத்தவேண்டும்."

சூடாமணி, "ஆனால், சரி. கங்காதரா! நீ இவ்வூரில் எங்கே தங்கியிருக்கிறாய்?" கங்காதரன் தான்குடியிருக்கும் வீட்டின் நம்பரையும் வீதியின்பெயரையும் சொன்னான்.

கங்காதரன் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, நாடகம் பார்ப்பவர்களெல்லோரும் கைகொட்டினார்கள். அதற்குக் காரணமென்ன? கூத்துமேடையில் ரூபவதியான ஒரு ஸ்திரீ பார்ப்பவர்கள் மனம் சந்தோஷமடையும்படி வெகுநன்றாய் 'ஆக்ட்' செய்தாள். சற்றுநேரம் சென்றதும் கூத்தும் முடிந்தது. கூத்துப்பார்க்க வந்தவர்களில், சிலர் மோட்டார் (Motor car) வண்டிகளிலும், சிலர் நான்கு குதிரைகள் பூட்டிய வண்டிகளிலும், சிலர் இரண்டு குதிரைகளாலிழுக்கப்பட்ட இரதங்களிலும், சிலர் டாக்கார்ட்களிலும், சிலர் ஜட்காக்களிலும், சிலர் துவிசக்கரவண்டி (Bicycles) களிலும், சிலர் பெட்டிவண்டிகளிலும், சிலர் ஒற்றைமாட்டு வண்டிகளிலுமாக, தங்

கள் தங்கள் தரத்திற்கேற்ற வாகனங்களிலும், மற்றையோர் கால்நடையாயும் தங்களுடைய வீடுகளை நோக்கிச் சென்றார்கள்.

## சிநேகிதர்கள்.

---

மறுநாட்காலை பத்துமணிக்குச் சூடாமணியின் படுக்கையறைக் கதவை அவனுடைய வேலைக்காரனாகிய கருப்பன் என்பவன் தட்டினான். சூடாமணி அப்பொழுதுதான நித்திரை நீங்கி எழுந்து உட்கார்ந்துகொண்டு கருப்பனைப்பார்த்து, "ஏனடா, இவ்வளவு சீக்கிரமாய் என்னை எழுப்புகிறாய்? நான் ஒருமணிநேரங்கூடத் தூங்கவில்லையே." என்று சொன்னான். பிறகு அவன் தனக்கு ஏதாவது கடிதங்கள் வந்திருக்கின்றனவா என்று கேட்டான். கருப்பன் சில கடிதங்களைக் கொடுக்க, சூடாமணி அவைகளைப் படுக்கையிலுட்கார்ந்துகொண்டே பிரித்துப் பார்த்தான். பார்த்துவிட்டுச் "சதாகாலமும் இந்தக் கடன்காரர்களுடைய தொந்தரவுதான் பெரிய தொந்தரவாயிருக்கிறது" என்று சொன்னான். சற்றுநேரம் சென்றபிறகு அங்கு மதிமானும் வந்து சேர்ந்தான். இருவரும் ஒன்றாய் உட்கார்ந்து காலைப்போசனம் அருந்தினார்கள். போசனமானபிறகு இருவரும் உயர்ந்த சீமைச் சாராயங்களைக் குடித்துக்கொண்டே சம்பாஷணைசெய்தார்கள்,

மதிமான், "இன்றுதினம் சமாசாரப் பத்திரிகையைப் பார்த்தாயா? பத்திரிகைகளிலெல்லாம் நேற்று நாடகத்தில் ஆக்ட்செய்த பாலாமணியைப் பற்றித்தான் எழுதப்பட்டிருக்கிறது."

சூடாமணி, "ஆம், அவள் எவ்வளவு நன்றாய் ஆக்ட் செய்தாள். அவளைப்போல் அழகுவாய்ந்த நாடகக்கணிகைகளை நான் எங்கும் பார்த்ததில்லை."

மதிமான், "எனக்கு அவளிடத்தில் அதிக விருப்பமுண்டாயிருக்கிறது. அவளை எப்படியாவது நான் அடையவேண்டும். நீ தான் எனக்கு இந்த விஷயத்தில் உதவி செய்யவேண்டும்."

சூடாமணி, "மதிமானே, நீ எனக்கு நல்ல உத்தியோகம் கொடுத்தாய். தனக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கும் புருஷன் தாசிவீடு செல்வதற்குத் தன் சகோதரனை ஒத்தாசைசெய்கிறானென்று அம்புஜத்திற்குத் தெரியவந்தால் அவள் என்ன சொல்லுவாள்?"

மதிமான், "இந்தச் சமாசாரம் உன் சகோதரிக்குத் தெரிய வேண்டாம். மேலும் விவாகம் நடைபெற இன்னும் வருடமிரண்டு செல்லவேண்டுமே. அதுவரை நான் சந்நியாசியாகவா இருக்கிறது?"

சூடாமணி, "நான் வேடிக்கையாகச் சொன்னேன். உனக்கு வேண்டிய உதவி என்னாலானமட்டும் பிரயாசைப்பட்டுச் செய்கிறேன். என்னுடைய வேலைக்காரனாகிய கருப்பன் மிகவும் தந்திரசாலி. அவனை விட்டுப் பாலாமணி எங்கே வசிக்கிறாளென்று தெரிந்துகொண்டுவரச்சொல்லுகிறேன். எனக்கும் உன்னால் ஒரு உதவி ஆகவேண்டியிருக்கிறது."

மதிமான், "பணத்தைத்தவிர மற்ற உதவி என்னவென்றாலும் நான் முழுமனதுடன் செய்வேன். பணவிஷயத்தில் நானும் அதிகக் கஷ்டப்படுகிறேன். என்னுடைய 'கார்டியன்கள்'(Guardians)பணம் கொடுக்கமாட்டோமென்கிறார்கள். அவர்கள் வருஷாந்தரம் கொடுக்கும் பணமும் செலவழிந்துபோய்விட்டது."

சூடாமணி, "நான் முன்னமேயே உனக்கு ஐயாயிரம் ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. இன்னமும் கேட்பது அழகில்லை. ஆயினும் எனக்கு முடையாயிருக்கிறது. உன்னிடத்திலும் பணம் இல்லை. இதற்கு என்ன செய்யலாம்?"

மதிமான், "எனக்கு ஒருயுக்தி தோன்றுகிறது. கங்காதரன் பணக்காரனாயிருக்கவேண்டும். அவன்வியாபாரியாயிருந்தவனென்று விக்கிரமவர்மா எழுதியிருக்கிறாரல்லவா? ஆகையால் அவனிடத்திலிருந்து ஏதாவது பணம் பிடுங்கலாம்."

சூடாமணி, "இது நல்ல யோசனைதான். கடிதமெழுதி அவனை இன்றுசாயந்தரம் விருந்திற்கு அழைக்கிறேன். நல்ல சாப்

பாடுபோட்டு உயர்ந்த சிமைச்சாராயக்களையும் கொடுத்தால் அவன் மப்பிலிழுக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்துவிடுவான்," என்று சொல்லிவிட்டுப் பின்வருமாறு ஒரு கடிதம் வரைந்தான்.

ராஜவீதி.

திங்கட்கிழமை பகல்.

பிரியமான கங்காதர!

நீதயவு செய்து இன்றுதினம் என் வீட்டிற்கு விருந்துண்ண மாலை ஆறரைமணிக்கு வந்துசேரவேண்டியது. என்னுடைய நேசன் மதிமானைத் தவிர வேறொருவரும் நம்முடன் இருக்கமாட்டார்கள்.

விசுவாசமுள்ள,

சூடாமணி.

இக்கடிதத்தை மதிமானுக்குக் காட்டிவிட்டு, ஒரு வேலைக்காரன் வசம் கங்காதரனிருக்கு மிடத்திற்கு அனுப்பினான்.

சாயந்தரம் ஆறரைமணிக்குச் சூடாமணியும் மதிமானும், முன்னவனுடைய வீட்டின் மேல்மாடியில் இருந்து பேசிக்கொண்டிருக்கையில் வீட்டுவாசலில் ஒரு ஜட்காவண்டி வந்துநின்றது. கங்காதரன் வண்டியிலிருந்து இறங்கி வண்டிக்காரனுக்கு வாடகையைக் கொடுத்தான். வண்டிக்காரனாகிய அப்துல்காதர் என்பவன் இன்னும் அரையணாக் கொடுக்க வேண்டுமென்றான். கங்காதரன் தான் கொடுத்ததுதான் சரியானவாடகையென்றான். அப்துல்காதர் விடேனென்று சொல்லக் கங்காதரன் கொடேனென்று சொல்ல இருவருக்கும் பெரியவாக்குவாதம் ஏற்பட்டது.

அப்துல்காதர், "என்னுங்கோ எஜமான்! பேசின வாடகை கொடுக்காமே என்ன இப்படி கொடுக்றீங்கோ."

கங்காதரன், "நான் பேசினபடிதான் கொடுத்திருக்கிறேன். ஏது நீ வண்டிக்காரபயல்களின் போக்கிரித்தனத்தைக் காண்பிக்கிறப்போவிருக்கிறதே."

அப்துல் "என்னுபா போக்கிரித்தனம் காமிக்றுங்கோ. நீங்கோ இந்தூருக்கு புச்சிபோலிக்குதே நாட்டுப்புறத்திலேந்துவந்தீங்களோ சும்மா கதேபண்ணாமே காஸ்குடுத்துட்டு அப்பாலேபோங்கோ."

கங்காதரன், "நான் என்ன வாடகை பேசினேன்?"

அப்துல், "நால்ணாயணு பேசிபோட்டு நால்ணு கொடுத்திருக்கீங்கோ, அடே நீங்கோ பேசினது வாபா என்ணு?"

கங்கா, "இனிமேல் ஜாஸ்தி பேசினல் செருப்பாலே அடிப்பேன். இங்கே வரக் குருடன்கூட நாலணாவிற்குமேலே வாட..."

அப்துல், "அடபேலே; நம்ம உங்கி எஜமான்கு ஐயாகு ஸொன்னேன், நீ நம்கு போடா வாடா செருப்பாலே அடிப்பேன் திட்டி இங்கே வர்த்துகு நால்ணுகுமேலே குருடன்கூடே வாடகே தாமாட்டான் சொல்றே. பேமானிமன்ஸா, நம்மோ பட்னம் தோட்டிங்கோ ஈஸ்துப் போராம்பார் குப்பைவண்டி அதிலேபோயி நால்ணுகு ஏறு"

கங்கா, "பேசாமற் போய்விடு. நீ இங்கே ஏதாவது அக்கிரமமாய்ப்பேசினுற் போலீஸ்காரனைக் கூப்பிட்டு அரெஸ்டு (Arrest) செய்யச் சொல்லுவேன்."

அப்துல், "அரேக்யாரே. அணாயணுது கொடுக்க விதியில்லே ஆள்கு பாத்தா கொடக்கூலிக்கு வேட்டி சட்டை வாங்கிப் போட்ணு வந்தாப்போலிக்குது போல்ஸ்காரங்கி என்ணுத்துக்கு கூப்பிரே. நம்மோ நவாப்ஸான்னு உங்கி தெரியாது. ஆசே து பான்சோத் சல்-சல்.

இதற்குள் ஜனங்கள் வந்து கூட ஆரம்பிக்க, கங்காதரன் வீட்டிற்குள் நுழைந்துவிட்டான். அப்துல்காதர் உள்ளே நுழையாதபடி கருப்பன் கதவைசசாத்திவிடவே அவன் சற்று நேரம்வரை வெளியேநின்று கத்திக்கொண்டிருந்து, பிறகு போய்விட்டான். இந்தச் சண்டையை மேல்மாடியிலிருந்து சாளரத்தின்மூலமாய்ப் பார்த்துக்கொண்டிருந்த மதிமானும் சூடாமணியும், கங்காதரன் உலோபி என்றும் கொஞ்சமும் மதிப்பில்லாதவனென்றும் பேசிக்கொண்டார்கள். கங்காதரனும் அவர்களிருக்குமிடத்திற்கு வந்தான்.

கங்காதரன், "உங்களூர் ஜட்காவண்டிக்காரர்கள் சுத்தப்போக்கிரிகளாயிருக்கிறார்கள்." (தொடரும்)

வ. வி. நடேசன்செட்டி.
ஆத்தங்குடி.

## சீவகாருணியம்.

———:(o):———

சீவகாருணியம் என்பது சீவன் காருணியம் என்னும் இருமொழிபாலாகிய தொடர்மொழி. சீவர்களிடத்திற் செயற்பாலதாகிய காருணியமெனப் பொருள்படும். சீவன், ஆன்மா, பிராணி என்பனவும், காருணியம், கருணை, தயை, இரக்கம் என்பனவும் ஒருபொருள் குறித்தனவாம். இவ்விரண்டினுள், சீவனாகிய ஆன்மாவைப்பற்றி ஆராய்ந்துகொண்டு பின்னர்ச் சீவர்களிடத்திற் செய்ய வேண்டிய காருணியத்தைப்பற்றி ஆராய்வாம்.

ஆன்மாக்கள், நித்தியமாய் வியாபகமாய்ச் சரீரந்தோறும் வெவ்வேறாய் எண்ணிறந்தபலவாய் இருவினைப்பயனாகிய இன்பதுன்பங்களை நுகர்தற்பொருட்டுப் பற்பல பிறவிகள்தோறும் பிறந்திறந்துழலுஞ் சிற்றறிவுஞ் சிறுதொழிலும் உடையனவாயிருக்கும். இன்னும் நித்தியமாய் ஒன்றாய்ப் பிறப்பிறப்பில்லாமற் கருணையே யுருவமாகவுடைய பரமான்மாவாகிய முழுமுதற்கடவுளைத் தலைவனாகவும் உள்ளன.

நாமெல்லோரும் மேற்கூறிய ஆன்மாக்களே. பசு பக்ஷி முதலிய பிராணிகளும் ஆன்மாக்களே. ஆன்மாக்கள் இயற்கையில் மேனோக்கிய அறிவையுடையன. "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப், பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய், வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச், செல்லாநின்ற வித் தாவரசங்கமத்து, எல்லாப்பிறப்பும்பிறந் திளைத்தேன்" எனப் பெரியாரருளிபடி நாம் எண்ணிறந்த பிறவிகளிற்செய்த புண்ணியமிகுதியால் இவ்வரிய மனிதயாக்கையையடையப்பெற்று ஆன்மாவின் இயற்கை மேனோக்கத்தையும் அடையப்பெற்றுள்ளோம்.

இங்ஙனம் உயர்ந்தபதவிக்கு வந்திருக்கின்ற நாம் மிருகாதிகளைப்போற் கீழ்நோக்கத்திற் செல்லாது நமதுண்மைத்தன்மையினையும் கடவுட் டன்மையினையும் இவற்றை யறியவொட்டாமற்றடுக்

கின்ற பாசத்தின் றன்மையினையும் (பசுபதிபாசலக்ஷணங்களை) உள்ளவாறறிந்து பசுபதியின் பெருங்கருணையைப் பெறுதல்வேண்டும்.

இறைவன் எல்லோரிடத்திலும் ஒருதன்மைத்தாகவைத்திருக்கின்ற நிரந்தர கருணையையுடையவர். நாம் நம்மைப் பிணித்துநிற்கின்ற பாசத்தடையால் மனமாதிய வேறுபட்டு, சிலவற்றைத் துன்பமெனவும், சிலவற்றை யின்பமெனவுங்கருதி வெறுப்புவப்பினையடைகின்றோம். இவற்றால் ஒருதன்மைத்தாகிய ஆன்மாக்களிடத்தில் வேறுபாடுற்று நன்மை தீமைகளைச் செய்கின்றோம்.

இங்ஙனஞ்செய்யும் இருவினையுள்ளளவும் பிறப்பிறப்பென்னுந் துன்பத்தினின்றும் நீங்கியுய்தல் எங்ஙனங்கூடும்! "பிறந்தோருறுவது பெருகிய துன்பம், பிறவாருறுவது பெரும்பேரின்பம், பற்றின்வருவது முன்னது பின்னது, அற்றோருறுவ தறிக" என்னும் ஆன்றோர்வாக்கும் இதனை வலியுறுத்துகின்றதே. இவற்றிற்குக் காரணமாகிய பாசத்தடை நீங்கவேண்டுமாயின் அவ்விறைவனது கருணையே இன்றியமையாத காரணமாகும். இதனைக் கருதித்தான் "அவனருளாலே யவன்றாள்வணங்கி" எனவுங் கட்டளையிட்டனர்.

இவற்றையெல்லாம் உண்மையெனக் கருதும் ஆஸ்திகராகிய நாம் இறைவனருளைப்பெறுதலும், அதனைப் பெறுதற்கேற்ற வழியைத்தேடுதலும் முக்கியமாதலின் இறைவனருளைப்பெறுதற்குச் சிவகாருணியமே ஏற்றவழியாகும்.

எங்ஙனமெனில், "வயிரவூசியும் மயன்வினையிரும்பும், செயிரறுபொன்னைச் செம்மைசெய்யாணியுந், தமக்கமை கருவியுந் தாமாம்" எனவும், 'இரும்பி னிரும்பிடை போழ்ப பெருஞ்சிறப்பி, னீருண்டார் நோல்வாய் பூசப தேரி, னரிய வரியவற்றாற் கொள்ப பெரிய, பெரியாரா னெய்தப் படும்' எனவுங் கூறிய ஆன்றோர்வாக்கை நோக்குவோமாயின் வயிரமுதலியவற்றைச் செப்பஞ்செய்வதற்கு வயிர முதலியனவே கருவியாதல்போல் இறைவன்கருணையைப் பெறுதற்கு அவ்விறைவனது உடைமைப்பொருளாகிய எல்லாப் பிராணிகளிடத்துங் கொள்ளும் சிவகாருணியமே ஏற்றகருவியாகும்.

இனிக் காருண்யத்தைப்பற்றி யாராய்வாம். பிராணிகள் படுந் துன்பத்தைக்கண்டு மனஞ்சகியாது யாதொருதொடர்புமின்றி அத்துன்பத்தைநீக்க முயலும் மனநிகழ்ச்சியே காருணியமாகும். இத்தகைய காருணியமுடையோர் தன்னுடைய களங்கத்தைநீக்க முயலாது உலகிருளைநீக்கிக் குளிர்விக்கின்ற திங்களைப்போற் பிறர் துன்பத்தை நீக்குதலே முக்கியமாகக் கொண்டொழுகுவர். இதனைக் கருதாத சிலரன்றோ தம்முடலைவளர்த்தற்குப் பிறவுயிர்களின் உடலைச்சேதிக்குந்தீங்கைச் சிறிதுமெண்ணாது செய்யத்துணிகின்றனர்! இஃதென்னஅறியாமை! இதனைக்கருதித்தான் ஆன்கொலையென வாயாற்சொல்லவுங்கூசி 'ஆன்முலையறுத்தவறனிலோர்க்கும்' என மனநடுங்கிக் கூறுவாராயினர்.

கருணைசெய்யுங்கால்எல்லாப்பிராணிகளும்'இதனைப்பெறுவிடின் உடலோடுகூடிவாழும் வர்ழ்க்கையினின்றும் அழிதல்கூடும் அதனை அப்பிராணிகளுக்குக் கொடுத்து அவ்வழிவைநீக்குதலே சிறந்த கருணையெனக் கோடல்வேண்டும். "உண்டிமுதற்றே யுணவின் பிண்டம், உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே, உணவெனப் படுவது நிலத்தொடுநீரே" என்றாங்கு எல்லாப்பிராணிகளும் உணவில்லாவிடின் உணவின் பிண்டமாகிய வுடலினின் றழிவடைதலின் உணவுகொடுத் துடலைப் பாதுகாத்தல்வேண்டும்.

சர்வான்மாக்களும் கடவுளின் திருமேனிகள். ஆன்மநிலயமாகிய வுடம்புகளெல்லாம் கடவுளுக்கு ஆலயங்கள். ஆலயத்திருப்பணி செய்தல் உத்தமதருமமெனக் கூறும் வேதாகமங்கள் உணவினைக் கொடுத்து உடலைவளர்க்குந் தருமத்தைப் புகழ்ந்தேத்தாது விடுமா? உலகம் போற்றுந்தருமமெல்லாம் உணவுகொடுத்தலிலடங்கும். ஆதலின் மனமிரங்கி நீரையும்உணவையும் எற்றார்க்கு மாற்றுதவல் வேண்டும்.

இஃதிங்ஙனமிற்க; தம்மிடத்துவந்து ஒன்றைப் பெற்றுச் சென்றவர் மீட்டும் பிறர்பாற்சென்று இரந்து வருந்துதலின்றிச் சுகமெய்தக்கொடுத்தலே கொடையாளர் செய்கையாகும்.

அத்தரத்தினின்றாய்வோமாயின், ஓ சன்னசத்திரத்தில் சாம்பவுண்டு சென்றவரும் அற்றைப் பிற்பகலிலேயே மற்றொரு சத்திரத்தை நாடவேண்டியிருக்கிறது. அல்லது ஆயுளளவும் அன்னங்கொடுப்பதாய்க் கொடிகட்டினும் ஆன்மலாபத்தைப் புரியும் அறிவு வளர்ச்சி குன்றி உடல் வளர்ச்சிமாத்திரமாய்ப் பெரும்பயனின்றி, மலைகல்லி யெலிபிடித்தல்போலாகின்றது. அல்லாமலும் அநேகர் மடமையும் சோம்பலுமுடையவராய்த் தேசமுன்னேற்றத்திற்குந் தடையாய் முயற்சியின்றி வீணர்களாகின்றனர். ஆதலின் உடல் வளர்ச்சியோடு அறிவுவளர்ச்சியையுங் கருதி அதற்கேற்ற கல்வியாகிய உணவையுங் கொடுத்துவருதற்கு முன்வரல்வேண்டும்.

அன்னசத்திரமென்றால் அதற்கடுத்துக் கலாசாலையுமிருத்தல் வேண்டும். கலாசாலையிற்கல்விபயிலும் மாணவர்களே பெரும்பாலும் அன்னம்புசிக்கும் அருகதையா யிருத்தல்வேண்டும். இங்ஙனஞ் செய்வதே பெருங்கருணையாவதோடு தேசநன்மைக்கும் ஏற்ற சாதகமாகும்.

இறைவன் கருணையைப்பெற விரும்புவோரெல்லாம் அன்னதானத்தோடு வித்தியாதானத்தையும் ஒன்றற்கொன்று அங்கமாகக்கொண்டு செய்துவருவாராயின் இறைவன் கருணையைப்பெற்று நித்தியவின்பத்தை யடைவார்களென்பது சாதம். இவ்வெண்ணம் நிறைவேற அவ்வண்ணலது அருளைப் போற்றுவோமாக. சுபம்!

இங்ஙனம்,

**சண்முகநாதன்.**

பலவான்குடி.

---

## நாநாவிதக் குறிப்புகள்.

பர்மாவில் தேசபாஷையில் வைத்தியப்பள்ளிக்கூடம்:—பர்மா தேசத்து லெப்டினெண்ட் கவர்னர் அங்கு ஆங்கிலந்தெரியாத இந்தியர்களுக்குத் தேசபாஷையில் வைத்தியக்கல்விபயிலுவதற்குப் பள்ளிக்கூடமொன்று ஸ்தாபிக்க ஏற்பாடுசெய்ய ஒரு கமிட்டியை ஸ்தா

பித்திருக்கிறார். அக்கமிட்டியானது, அநுபவபூர்வமாய்க் கல்விகற்பிக்க வேண்டிய சௌகரியங்களைப் பற்றியும், பள்ளிக்கூடத்தில் எத்தனை மாணவர்கள் சேர்த்துக்கொள்ளக்கூடுமென்பதைப் பற்றியும், இதற்காக நேரிடும் பணச்செலவைப் பற்றியும் நிர்வாகத்தைப் பற்றியும் இவ்வளவு காலம் பயிற்சிசெய்யப்படவேண்டுமென்பதைப்பற்றியும் ஆராய்ச்சிசெய்து விஷயங்களை அறிவிக்கும். இம்மாதிரிப் பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்க உத்தேசித்திருப்பது மேனாட்டு வைத்திய சாஸ்திரத்தை ஏழைஜனங்கள் அறிந்துகொள்ளும் பொருட்டேயாம்.

ரணங்களை ஆற்றுவதிற் சர்க்கரையின் உபயோகம்;—ரணங்களை ஆற்றுவதிற் சர்க்கரையின் உபயோகத்தைப்பற்றிப் பின்வரும் குறிப்பு வைத்தியகலாநிதியிற் காணப்படுகின்றது:—வியாதிகளுடையவும், அவற்றின் சிகித்சைகளுடையவும் தத்வங்களை ஆராய்ச்சிசெய்வதற்கென்று ஏற்பட்டுள்ள 'ஸொஸைடி ஆப் பாதலாஜிகல்ஸயன்ஸ்' என்னும் சங்கத்தில், டாக்டர் விஹாஸட் என்பவர் தாம் அநேக ஸமயங்களில் மிருகங்களுக்குச் சஸ்திரசிகித்சை செய்கையில், அவற்றின் ரணங்களை உப்புநீரால் கழுவி அப்பால் சர்க்கரையை அந்த ரணங்களின் மேல் தூவி அவற்றை ஆற்றியதாகக் கண்டுபிடித்த தாய்ச் சிலவிவரங்களைக் கூறினர். சர்க்கரையைத் தூவிவருகையிற் சிலநாட்களுக்கெல்லாம் ரணம் விரைவாக ஆறிவருவதைக்காணலாம். இச்சிகித்சையை மனிதருக்கும் சீழ்பிடிக்கும் ரணங்களிற் செய்து பார்க்கவேண்டுமென்று டாக்டர் கிரோலெட் என்பவர் வற்புறுத்திக் கூறினர். அவ்விதமே மனிதருக்கும் இதை உபயோகித்துப் பார்த்ததில் நன்றாகப் பிரயோஜனப்படுவதாகத் தெரியவந்தது. சர்க்கரைக்குப் பூயாபகம் (Aaisaltle) என்கிற குணம் விசேஷமாய் உண்டென்பது வெகுகாலத்திற்குமுன்னே நம்மவர்க்குத் தெரிந்து அவ்வாறுசெய்வது வழக்கத்தில் இருந்துவந்ததென்பதைமட்டும் கவனிக்கவேண்டும். சிலநாட்களுக்குமுன்பு மேனாட்டுவைத்தியர்கள் சர்க்கரையை அயோடோபாரத்துடனாவது நாப்தலீனுடனாவது கலந்து ரணங்களுக்கு உபயோகிக்கலாமென்று கண்டார்கள். முன்பு டாக்டர் G மாக்னஸ் என்பவர் பரீக்ஷார்த்தமாகச் சர்க்கரையை ரணங்களில் உபயோகித்து நற்குணங் கண்டிருக்கிறார்.

கற்பூரம்:—உலகத்தில் எங்கும் உபயோகிக்கப்படும் கற்பூரமானது ஜப்பான்தேசத்தில தான் உற்பத்தியாகின்றது, அங்கு 1916-17-ம் வருஷத்தில் 20,000 மணங்கு கற்பூரமும். 40000 மணங்கு கற்பூரத்தைலமும் உற்பத்தியாயின வென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தக் கற்பூரமரங்கள் ஜப்பானைச்சேர்ந்த பார்மோசா தீவில்தான் மிகுதியாக வளர்கின்றன. ஜப்பானைவிட அங்குக் கற்பூரம் அதிகமாக உற்பத்தியாகின்றது.

இங்கிலீஷ் கப்பலில் இந்தியருக்கு உத்யோகம்:—கல்கத்தா வாசியாகிய சுரேந்த்ரநாதமலம்தார் என்பவர், "மர்ச்செண்ட் ப்ரின்ஸ்" என்ற கப்பலுக்கு 4-வது இன்ஜினியராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று சமாசாரம் எட்டுகின்றது. இங்கிலீஷ்கப்பலில் இந்தியருக்கு உத்தியோகம் கிடைத்தது இதுதான் முதல்தடவையாகும்.

சுருட்டுப்பிடிப்பது கெட்டவழக்கம்:—சுருட்டுப்பிடிக்கும்வழக்கமானது நமதுநாட்டில் வெகுவிரைவாய்ப் பரவிக்கொண்டுவருகின்றது. இதைத் தடுப்பதற்கு இராஜாங்கத்தாரால் பலத்த முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படாவிட்டாலும், ஆங்காங்குப் பொதுச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டுவது அவசியமாகும். கல்கத்தாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இத்தகையசங்கத்தாரின் கூட்டமொன்றில் தலைமைவகித்த டாக்டர் C. ஸர்க்கார் எம். டி. என்பவர் சுருட்டுப்பிடிப்பதன் கெடுதல்களைப் பற்றிப் பேசுகையில், "அது நமது ஞாபகசக்தியை ஒழித்துவிடுகின்றதென்றும், தேக ஸௌக்யத்தையும் மனோசக்தியையும் கெடுக்கின்றதென்றும். இதனால் வரும் நோய்களைத் தீர்க்கத்தக்க மருந்துகளை இல்லையென்றும் குறிப்பிட்டார்.

இலவசக்கல்வி:—கல்வியபிவிருத்திவிஷயத்தில் சுதேச சமஸ்தானங்கள் மிகவும்முற்போக்கடைந்துவருகின்றன. கோலப்பூர்ச் சமஸ்தானத்தில் ஆரம்பக்கல்வியானது இலவசமாயும் கட்டாயமாயும் செய்யப்பட்டிருக்கின்றது. இதன்செலவுக்காக மகாராஜா அவர்கள் இவ்வருஷம் ஒரு லட்சம் ரூபாய் அதிகம் உத்தரவுசெய்திருக்கிறார்கள். இதைப்போலவே இன்னும்சில ஸமஸ்தானங்களும்

னும் ஆரம்பக்கல்வியானது கட்டாயமாயும் இலவசமாயும் ஆக்கப்பட்டிருக்கின்றது. இவ்விதமே பிரிட்டிஷ் இந்தியாவிலும் அநுசரிக்கப்பட்டால் மிகுந்த நன்மையுண்டாகும்.

உலகத்தில் உயர்ந்தவன்:—அமெரிக்காவில் பிலடல்பியா என்னும் ஊரிற்பிறந்த குக் என்பவன் உலகத்திலிருக்கும் பிள்ளைகளுக்கெல்லாம் உயரமாயும் கனமாயும் இருக்கின்றானாம். அவனது உயரம் 6 அடி 7 அங்குலம்; எடை 192 ராத்தல். அவனுக்கு வயது 15 தான் ஆகின்றதாம். இந்தச் சிறுவயதில் இவ்வளவு உயரமும் கனமுமிருப்பது ஆச்சரியமே. ஜனோபகாரி.

---

## மதிப்புரை.

மனோரஞ்சனி:—இப்பெயர்பூண்ட மாதாந்தப் பத்திரிகையொன்று வரப்பெற்றோம். இப்பத்திரிகை காரைக்குடியினின்றும் வெளிவருகிறது. இதற்கு நாளிது பிங்கள ஆடிமீ ஸஞ்சிகையே முதல் ஸஞ்சிகையாக இருக்கிறது. இந்தஸஞ்சிகையில் அருமையானவிஷயங்கள் தக்கபண்டிதர்களால் எழுதப்பெற்றிருக்கின்றன. அவற்றுள் "செந்தமிழ்ப்பாஷையுந் தேவபாஷையே" என்னும்வியாஸம் மிகவும்பாராட்டத்தக்கது. இதனையெழுதினவர் தக்க வித்வானாகவும், அநுபவசாலியாகவும் உள்ளவர். தக்க பிரமாணங் காட்டி எழுதியிருக்கிறார். "மனோசக்தி" என்னும் வியாஸமும் படிப்போரது மனத்தைக்கவரும்சக்திவாய்ந்துள்ளதாகவே எழுதப் பெற்றிருக்கிறது. பெற்றோரைப்பேணல் என்னும்வியாஸம் எழுதியுள்ளார் தமது அநுபவமுறையைநன்கு காட்டியுள்ளார். மற்றநும் இதனைப் பின்பற்றவேண்டியதேயாகும். இதன் வருடச்சந்தா ரூ. 2—0—0 வேண்டுவோர் மானேஜர், மனோரஞ்சனி ஆபீஸ், காரைக்குடி என்று எழுதிப்பெற்றுக்கொள்ளவும்.

வைத்தியக் கைம்முறை:—இது, சில அநுபவவைத்தியமுறைகள் அடங்கியுள்ள ஒருசிறு புத்தகம். முறைகளெல்லாம நமது தேசவைத்தியமாகிய ஆயுர்வேதமுறையே. செய்பாகமும் நீக்கும்நோய்களும்விவரமாக எழுதப்பெற்றுள்ளன. இதன்விலை அணா இரண்டே. வேண்டுவோர் காரைக்குடிக் கம்பராமயணப்பிரசாரகர் M. V. கோவிந்தராஜையங்காருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

ஸ்ரீ பிரஹதம்பாள் ஸஹாயம்.

# புதுக்கோட்டை ஸம்ஸ்தானம்.

## பிங்கள ௵ நவராத்திரி பண்டிகை.

1917-அக்டோபர் ௴ 17உ க்கு, பிங்கள-௵ ஐப்பசி ௴ 1உ புதன்கிழமை ஆரம்பமாகி நடக்கிற நவராத்திரி பண்டிகையின் கிரமம்:—

### ஸ்ரீ அம்பாள் தரிசனம்.

மேற்படி தேதி உதயாதி 1-நாழிகைக்குமேல் 5-நாழிகைக்குள் துலா லக்னத்தில் மஹா-ள-ள-ஸ்ரீ மஹாராஜா அவர்கள் ராமபாணகத்தி ஸஹிதம் தருப்பு டங்காவுடன் ஸ்ரீ திருக்கோகர்ணம் கோவிலுக்குப்போய் ஸ்ரீபிரஹதம்பாள் தரிசனம்செய்துகொண்டு சடேஸவாரியுடன் ராஜவீதி பிரதக்ஷிணமாய் ஸவாரி விஜயம்செய்து அரண்மனை ரங்கவிலாசத்தில் இருக்கிற ஜப பிராமணாள் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்வார்கள்.

### பூஜாரம்பம்.

மேற்படி தேதி உதயாதி 10¼-நாழிகைக்குமேல் 15-நாழிகைக்குள் தனூர் லக்னத்தில் ௸-அரண்மனையில் நவராத்ரிமஹோத்ஸவத்திற்காக துர்க்கா, லக்ஷ்மி, ஸரஸ்வதி, கும்பங்களுக்கும், இதர பிம்பங்களுக்கும் நேத்திரோன்மீலனமாணபிறகு கடஸ்தாபன பூஜாரம்பம்செய்யப்படும். மேற்படிதேதி உதயாதி 20¼ நாழிகைக்குமேல் 24-நாழிகைக்குள் கும்ப லக்னத்தில் பூரி ஆரம்பிவிக்கப்படும், அன்று ராத்திரியும் பூஜைநடக்கும்.

### நித்தியப்படி இரண்டுவேளை பூஜை.

| | | | | |
|---|---|---|---|---|
| அக்டோபர் ௴ | 18உ | க்கு ஐப்பசி ௴ | 2உ வியாழக்கிழமை | 2-ம் பண்டிகை. |
| ” | 19உ | ” | 3உ வெள்ளிக்கிழமை | 3-ம் ” |
| ” | 20உ | ” | 4உ சனிக்கிழமை | 4-ம் ” |
| ” | 21உ | ” | 5உ ஞாயிற்றுக்கிழமை | 5-ம் ” |
| ” | 22உ | ” | 6உ திங்கட்கிழமை | 6-ம் ” |
| ” | 23உ | ” | 7உ செவ்வாய்க்கிழமை | 7-ம் ” |

[illegible]

### ஸரஸ்வதிபூஜை.

அக்டோபர் ௴ 24உ க்கு ஐப்பசி ௴ 8உ புதன்கிழமை 8-ம் பண்டிகை உதயாதி 3¾-நாழிகைக்குமேல் 9-நாழிகைக்குள் விருச்சிக லக்னத்தில் ஆயுத சுத்திசெய்து ஸரஸ்வதிபூஜைசெய்யவும் முகூர்த்தம் உத்தமம்.

## வித்வத் ஸம்பாவனை.

அக்டோபர் 25 உக்கு ஐப்பசி 9உ வியாழக்கிழமை விஜயதசமி காலை 7-மணிக்குமேல் 9-மணிக்குள் வித்வத் ஸம்பாவனை கல்யாணக்கட்டில் நடக்கும்.

## புனப்பூஜை. ஆயுத கிரஹணம்.

மேற்படி தேதி காலமே 9-நாழிகைக்குமேல் 13½-நாழிகைக்குள் துலா லக்னத்தில் மஹா-ா-ா-ஸ்ரீ மஹாராஜா அவர்கள் புனப்பூஜை வகையரா செய்துகொண்டு பெரிய பூரிக்கும் ஜப தக்ஷிணைக்கும் தத்தம் செய்துபோட்டு ஆயுதகிரஹணம் செய்வார்கள். அப்பால் உத்தியோகஸ்தர்கள் உத்தரவு பெற்றுக் கொள்ளுகிறது.

## பெரியபூரி.

மேற்படி தேதி பகல் 22½-நாழிகைக்குமேல் 24-நாழிகைக்குள் கும்ப லக்னத்தில் பெரியபூரியும் ஆரம்பிக்கப்படும்.

## விஜயதசமி அம்புபோட ஸன்னாஹ ஸவாரி.

மேற்படி தேதி உதயாதி 28½-நாழிகைக்குமேல் 33-நாழிகைக்குள் மேஷ லக்னத்தில் மஹா-ா-ா-ஸ்ரீ மஹாராஜா அவர்கள் ராமபாணசக்தி ஸஹிதம் ஸகல ஸன்னாஹத்துடன் ா-திவான் அவர்கள் மற்ற எல்லா உத்தியோகஸ்தர்களுடன் ஸ்ரீ திருக்கோகர்ணத்திற்கு மேலராஜவீதி வழியாக அம்புபோட ஸவாரி விஜயம் செய்வார்கள். ஆசாரியார் தண்டியலில் வருவார். அரண்மனையிலிருந்து புறப்பட்டவுடன் 21 பீரங்கி வேட்டுகள் போடப்படும்.

## உடன் ஸ்ரீஅம்பாள் தரிசனம்.

ஸ்ரீ திருக்கோகர்ணத்தில் வழக்கப்படி அம்புபோட்டவுடன் கோவிலுக்குப்போய் ஸ்ரீ பிரஹதம்பாள் தரிசனம் செய்துகொண்டு ஸகல ஸன்னாகத்துடன் பெரிய ராஜவீதி பிரதக்ஷிணமாகத் திரும்ப அரண்மனைக்குள் வந்துசேருவார்கள்.

## விஜயதசமி கர்னாடகதர்பார்.

பிரஹன்நாயகி விலாசத்தில் வந்தவுடன் 21 பீரங்கி வேட்டுகள் போடப்படும். கர்னாடகதர்பார் நடக்கும். மஹா-ா-ா-ஸ்ரீ மஹாராஜா அவர்கள் காதியில் உட்கார்ந்தபிறகு எல்லா உத்தியோகஸ்தர்களும் நஜர்வைத்துக் கண்டுகொள்ளுவார்கள். தானாதிகாரி முதலிய ஸதஸ்யார் தேங்காய்வைத்துக் கண்டுகொள்ளுவார்கள், உடனே சந்தனம், தாம்பூலம் கொடுக்கப்படும்,

தர்பார் ஆனவுடன் ஈ-திவானவர்களைத் தருப்பு வகையாக என்ஜுஹத்துடன் ஜாகையில் கொண்டுபோய் விடுகிறது. ஈ-திவான் அவர்கள் ஜாகையில் பாரிஸிரிகள் உத்தியோகஸ்தர்கள் வித்வாம்ஸான் இவர்களுக்கு சந்தனம், தாம்பூலம் கொடுக்கப்படும். ஆசாரியாரையும் ஹரிக்காரருடன் திவட்டி ஸஹிதம் ஜாகைக்கனுப்புகிறது.

### ராமாயண பட்டாபிஷேகம்.

மஹா-ா-ா-ஸ்ரீ மஹாராஜா அவர்கள் பூஜாகிருஹம் வந்து ராமாயண பட்டாபிஷேகமான பிறகு அரண்மனைக்கு விஜயமாவார்கள்.

---

இராமநாதபுரம் ஸமஸ்தானம் ஹெ-ஜுர் ஆபீஸிலிருந்து அடியிற்கண்ட கடிதம் எமக்குக் கிடைத்திருக்கிறது-

### வித்தியாபாநுப் பத்திராதிபர் அவர்கட்கு-

இவ்வருஷத்தில் நமது மிக்கமாட்சிமைபொருந்திய இந்தியா சக்ரவர்த்தியாரவர்கள் இப்போது நடந்துகொண்டிருக்கும் பெரும்யுத்தத்தில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும்படி நேரிட்டிருப்பதை யுத்தேசித்து வருஷந்தோறும் இராமநாதபுரத்தில் வெகுவிமரிசையாக நடதப்பெற்றுவரும் மஹாநவராத்ரிமஹோத்ஸவமும் அதன் பூர்வாங்கமான களியாட்டங்களும் இவ்வருஷத்தில் அதிகவிமரிசையாகநடைபெறுதென்றும், தெய்வபூஜைகளும் அவற்றிற்கின்றியமையாதவைகளாகிய காரியங்களுமே உசிதமாக நடதப்பெறும்என்றும் தங்கள்பத்திரிகைவாயிலாக எல்லோருக்கும் தெரியவெளியாகும்படிக்கு மாட்சிமைதங்கிய சேதுபதிமகாராஜா அவர்கள் உத்தரவுப்படி தங்களைக்கேட்டுகொள்ளுகிறேன்.

(ஒப்பம்) asstd Devan.

---

## சபைநிகழ்ச்சிக் குறிப்புகள்.

### கோநகர் ஞானசம்பந்த நற்சபை.

### விநாயகசதுர்த்தி.

பிங்களஹு ஆவணிமீ சுஉ (21-8-17) செவ்வாய்க்கிழமை, காலையில் விநாயகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகளும் சண்பகவிஷ்டிப்பெருமான் ஆகுவாகனத்தி லெழுந்தருளி வீதிவலம்வருதலும் இவற்றைத் தெரிசிக்க வந்தவர்க்கெல்லாம் விருந்தும் நடந்தன.

பின்னர் 5-மணிக்கு மதுரை வித்துவான் ஸ்ரீ கா. சுந்தரேசவரையரவர்கள், சர்வேசுவரன் தன்னை வணங்கும்பொருட்டாகவேயாவருக்கும் தநுகரண

புவனபோகங்களை அளித்திருக்கிறாரென்றும், ஆகையால் நாமெல்லோரும் அவரை வழிபடவேண்டுவது ஆவசியகம் என்றும், பூரண அதிகாரம் பெற்றவரும், பிரம விஷ்ணு உருத்திரேந்திராதிகளாலும் வணங்கத்தக்கவரும், தன்னை வழிபடுவோர்க்கு எல்லாவித விக்கினங்களையும் நீக்கி எல்லாவித நன்மைகளையும் அளிக்கவல்லவரும் ஆகிய விநாயகக்கடவுளை வழிபடுதலே மிகவும் சிறந்ததென்றும், அவரை எல்லாத்தினங்களிலும் வழிபடலாமாயினும் விநாயக சதுர்த்தியாகிய இன்றுதினமே மேன்மையுடைத்தென்றும், மற்றும் பலவிதமாகவும் விநாயகப்பெருமானது பிரபாவங்களை விளக்கியுரைத்தார்கள்.

ஹாரசந்தனாதிகள் வழங்கப்பெற்று இரவு 8-மணிக்குச் சபை பூர்த்தியாயிற்று.

ஞானசம்பந்தன்:

—:(o):—

## நாச்சியார்புரம்.

கும்பாபிஷேகம்:—இவ்வூரில் நகரப்பொதுவில் அமைக்கப்பெற்ற ஸ்ரீ நாச்சியாரம்மை திருக்கோயிற் கும்பாபிஷேகம் நிகழும் ஆவணிமீ 8உ வியாழக்கிழமை காலை 8-மணிக்கு வெகு விமரிசையாய் நடைபெற்றது. அக்காலத்து அவ்வம்பிகையின் மூலஸ்தானமாகிய நாட்டுநாச்சியம்மை திருக்கோயிற் கும்பாபிஷேகமும் நடைபெற்றது. பக்கத்தூர்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் ஜபமுதலிய கைங்கர்யங்கட்காகவும் தரிசனார்த்தமாகவும் வந்திருந்த பிராமணோத்தமர்களும், வைசியர்களும், பிறரும் தக்கபடி அன்னபானாதிகளாலும், சந்தனபுஷ்ப தாம்பூல முதலியவைகளாலும், இனியமொழிகளாலும் உபசரிக்கப்பெற்றார்கள். அன்றிரவு சுமார் 1-மணிக்கு அம்பிகை தன்னைப் பஞ்சமரும் தரிசித்துய்யும்பொருட்டு வெளிப்புறப்பாடுகொண்டருளினள். அம்பிகையின் திருமேனி யொளியாலும், தீபங்களின் ஒளியாலும் இரவு பகல் போல விளங்கிற்று. அம்பிகையின் சுந்தரவுருவத்தைத் தரிசித்த ஜனங்களெல்லாம் இம்மையிலேயே தெய்வத்தன்மை யெய்தியவர்கள்போல நோக்கிய கண்ணிமையாது நோக்கிக்கொண்டே பேரானந்தக் கடலிலாழ்ந்து பரவசமுற்று நின்றனர். வேதபாராயணமும், தேவாரபாராயணமும், வாணவேடிக்கைகளும் மிக அழகாய் நடைபெற்றன. பின் அம்பிகை கோயிலின் தென்பாரிசத்திலுள்ள ஊருணியையும் திருக்கோயிலையும் வலமாக வுலாப்போந்து திருக்கோயிலுள் எழுந்தருளினள்.

செந்தமிழ்வாசகசபை:—இதன்சபை நிகழும் ஆவணிமீ 9உ வெள்ளிக்கிழமை மாலை 4-மணிக்கு ஷை நாச்சியாரம்மை திருக்கோயிலிற் கூட்டப்பெற்றது. அப்பொழுதுநகரத்தார் வேண்டுகோட்படி அரியக்குடி ராமாயணம் ஸ்ரீமத்

வரதாசாரியஸ்வாமிகள் அக்கிராசனம்வகித்தார்கள். மகிபாலன்பட்டி வித்வான ஸ்ரீமத் மு. கதிரேசசெட்டியாரவர்களும், மற்றுஞ் சில வித்வான்களும் விஜயஞ்செய்தார்கள். சபையிற் சுமார் 400 பேர்கட்கு மேல் நிறைந்திருந்தார்கள். முதலில் அக்கிராசனரவர்கள் கடவுள்வாழ்த்தும், முகவுரையுங்கூறிக் "கற்பு" என்னும் விஷயத்தை எடுத்து விரிவாகவும் அழகாகவும் உபந்யசித்தார்கள். அதன்பின் இவ்வூர் ஸ்ரீ நாராயணையரவர்கள் "புலால் மறுத்தல்" என்னும் விஷயத்தை நன்கு உபந்யசித்தனர். அதன்பின் இவ்வூர் ஜயங்கொண்ட விநாயக வித்தியாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீமத் ரெ. இராமையங்காரவர்கள் "கல்வி" என்னும் விஷயத்தைப் பல பாகுபாடுகள் செய்துகொண்டு விளக்கமாகவும் விரிவாகவும் நன்கு உபந்யசித்தார்கள். அதன்பின் இருமொழிப்புலமையும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவர்களான ஸ்ரீமத் மு. கதிரேசச் செட்டியாரவர்கள் பெரியபுராணத்தில் அப்பூதியடிகள் நாயனாரது திவ்விய சரித்திரத்தையெடுத்து அப்புராணத்தில் இலைமறைகாய்போலுள்ள பல அரியபெரிய விஷயங்களையும், மற்றை நாயன்மார்கள் சரித்திரங்களிலெல்லாம் ஜாதி முதலியவற்றை இன்னவென விளங்கக்கூறுமவர், இவ்விடத்தில் "தாண்டவம் புரியவல்ல தம்பிரானார்க்குத் தொண்டன்" என்றுமாத்திரம் கூறியதன் காரணத்தையும் பிறவற்றையும் விளக்கிக் கற்றவரேயன்றி மற்றவரும் மனத்திற்றேக்கிக்களிக்குமாறு "கன்னற் பாகையும்பாலையுந் தேனையுங் கைக்குமென்றிடமேவாஞ்" சொன்னயமும் பொருணயமும் புணர்த்தி யுபந்யசித்துப் பின்பு வாசகசாலை, வித்யாசாலைகளின் முன்னேற்றத்திற்குக் காரணமான சில விஷயங்களையுங் கூறினார்கள். பின் செந்தமிழ்வாசகசாலைக் காரியதரிசியாகிய ஸ்ரீ சு. வி. கா. காசியப்பசெட்டியாரவர்களால் மேற்படி வாசகசாலைக்குப் பொருளுதவிசெய்துவருபவர்களின் அட்டவணை படிக்கப்பெற்றது. பின்பு இவ்வூர் அழகரையங்காரவர்கள் குமாரர் ஸ்ரீநிவாசையங்காரவர்கள் "பக்தி" என்னும் விஷயத்தைச் சுருக்கமாகக் கூறினார்கள். பின் அக்ராசனரவர்கள் மேற்படி விஷயங்களைப்பற்றி மிகஅழகாக அபிப்ராயங்கூறவும், நகரத்தார் அபிப்ராயப்படி கலாசாலைத் தலைமையாசிரியர் ரெ. இராமையங்காரவர்கள் அக்ராசனரவர்கட்கும், உபந்யாசகர்கட்கும் வந்தனோபசாரங்கூறிப் பூமாலை சூட்டவும் சங்கீதவித்வானொருவர் மங்கலவாழ்த்துக் கூறவும், அம்பிகைக்குத் தூபதீப நைவேத்ய முதலியன வழங்கவும் இரவு 8-மணிக்குச் சபை பூர்த்தியாயிற்று.

மஹேஸ்வரபூஜை:—இக்கைங்கர்யம் ஆவணிமீ 12உ திங்கட்கிழமையன்று வெகுவிமரிசையாய் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான ஜனங்கட்கு அன்னம் அளிக்கப்பெற்றது. சுபம். சுபம். சுபம்.

இங்ஙனம்,
சொ. கா. செ. வி. மாணவன்,
நாச்சியார்புரம்.

## கண்டனூர் ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவர ரீடிங்ரூமின்

### இரண்டாண்டு நிறைவு விழா.

1917ளு செப்டம்பர்௴ 1௳ மாலை 3-30 மணிக்கு ஸபையோரால் முன்னரே பிரார்த்திக்கப்பெற்று விஜயம் செய்திருந்த, காரைக்குடி மீனாட்சி சுந்தரேசுவர வித்தியாசாலை என்னும் ஆங்கில தமிழ்ப்பாடசாலையின் தலைமையுபாத்தியாயர், பிரம்மஸ்ரீ S. G. சுப்பிரமணியஐயர் B. A. L. T. அவர்கள் ஸபாநாயகராக இருந்து ஸபையை நடத்திவைக்கத் தயைகூர்ந்து அவர்கட்கென்று ஏற்படுத்தியிருந்த விடுதியில் இருந்தார்கள்.

அவர்களை வரவேற்பதற்காக இச்சங்கத்தின் காரியதரிசி மிஸ்டர் தெ. அரு. சித. இராமநாதன்செட்டியார் அவர்களும், மற்றும் சபையின் அங்கத்தினர்களும் இதர கனவான்களும் வாத்யகோஷங்களுடன் சென்று சந்தன தாம்பூலாதிகள் வழங்கி அக்கிராசனாதிபதியவர்களை ஸபாமண்டபத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அவ்வூரிலும் பிறவூர்களிலுமுள்ள கனவான்களும் தனவான்களும் பிறருமாகச் சமார் 500 பேர் வரை கூடியிருந்தனர். பிறகு அக்கிராஸனாதிபதியவர்கட்கு வந்தனோபசாரப்பத்திரமும், ஸபையின் அவ்வருஷம் படிக்கவேண்டிய அறிக்கைபத்திரமும் படிக்கப்பெற்றன. பின்னர் ஸபாநாயகர் எழுந்து முகவுரையாக ஒருஸபைக்கு நாயகராக வீற்றிருக்கவேண்டியவர்க்கு அமைந்திருக்கவேண்டிய இயற்கைக் குணங்களைத் தக்க பிரமாணங்களுடன் எடுத்தோதி விநயம்கூறிப் பிறகு, ஸபைநிகழ்ச்சிக் குறிப்பின்படியே "முக்திசாதனம்" என்னும் விஷயத்தை உபந்யஸிக்கும்படி வான்துடி பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளைப் பிரார்த்தித்துக்கொண்டார்கள். அவர்களும் தங்களது பரந்த அறிவிற்கும் பழைய சாஸ்திரங்கட்கும் ஆசரித்த ஆசாரனைக்கும் ஏற்பக் கம்பீரமாகவும் உத்தேசக் கிரமமாகவும் தங்களது உபந்யாஸ விஷயமான முக்திசாதனத்துக்கு அவசிய ஸாதகங்களான புருஷார்த்த சதுஷ்டயங்களையும் கிரமமாக வ்யவஹரித்துக் கேட்போர் மனதில் நன்குபதியும்படியாக உபந்யாஸ மழை பொழிந்தார்கள். பிறகு அநுஷ்டானத்தின்பின் ஸபை 7-30க்குக் கூடிற்று.

ஸபாநாயகர் எழுந்து முகவுரையாகச் சிறிது பேசிவிட்டு, "வித்தைவிரும்பு" என்னும் விஷயத்தை யெடுத் துபந்யஸிக்கும்படியாக, கோநகர் கற்பகவிநாயக கலாசாலைத் தலைமையாசிரியர் பிரம்மஸ்ரீ பண்டித அ. கோபாலையரவர்களை வேண்டிக்கொண்டார்கள். அவர்களும், எழுந்து தாம் எடுத்துக்கொண்டுள்ள விஷயத்துக்கு ஏற்பத் தமிழ் மூதாட்டியார் தமது சூத்திரகதியில, "அறஞ்செய விரும்பு," "தானமது விரும்பு," "வித்தை விரும்பு" என்னும் மூன்று விதிச் சூத்திரங்களையும், "கொள்ளை விரும்பேல்," "சூது விரும்பேல்," "மீதூண் விரும்பேல்," என்னும் மூன்று விலக்குச் சூத்திரங்களையும் திரு-

வாய்மலர்ந்திருப்பதையும், அவற்றுக்கு முறையேயுள்ள பொருத்தங்களையும் ஒற்றுமை நயந்தோன்ற எடுத்துக்கூறி, நமது தாய்ப்பாஷையின் சிறப்பும், அதைச் செவ்வனே கற்பிக்கவேண்டிய அவசியத்தையும், கட்டாயப் பாடமாக வைக்கவேண்டிய விஷயங்களையும், எல்லாம் தேசபாஷைமூலம் கற்பிக்கப்பட வேண்டிய விதத்தையும். இவற்றினது அவசியத்தை அரசாங்கத்தாருக்குத்தெரி விக்கும்படியாக ஒவ்வொரு ஊரிலிருந்தும் மஹஜர் அனுப்பப் பெறல் வேண்டு மென்பதையும் திருத்தமாகச்சொல்லி முடித்தார்கள்.

பிறகு "ஜீவகாருண்யம்" என்னும் விஷயத்தைக் கண்டனூர் ஸ்ரீமான் ராம. ப. கு. ப. இலட்சுமணன்செட்டியார் அவர்கள் எடுத்துக்கொண்டு புலான் மறுத்தலைப்பற்றி யாவர்மனதிலும் அழுந்தும்படியாகச் சொன்னார்கள். அக்கிரா ஸனாதிபதியவர்கள் தமது அபிப்பிராயங்களைச் சொல்ல அன்றையஸபை நிறைவேறியது.

இரண்டாவது நாள் (2 9-17) காலை 9½ மணிக்குச் சபை கூடிற்று. கட வுள்வாழ்த்து முடிந்தவுடன் ஸபாநாயகர் அவர்கள் முகவுரையாகச் சிலசொல்லி, "விபூதி மகத்வம்" என்னும் விஷயத்தை யுபந்யஸிக்கும்படி லால்குடி பிரம்ம ஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரிகளை வேண்டிக்கொண்டார்கள். அவர்களும் விபூதி மகத்வம் விபூதியின்விதங்கள் அதனைச்செய்யும்வகை பசுக்களின்பெருமை முதலியவற்றைக்கூறி ருத்திராக்ஷமகிமையையும் விரித்துரைத்தார்கள். பின் காரைக்குடி எஸ். எம். எஸ். ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் பொன்னுது ரைர் அவர்கள் "திராவிடவேதப் பண்முறை" என்னும் விஷயத்தை யெடுத் துக்கொண்டு பண்வகைகளை விரித்து ஓதி அவற்றுக்கேற்பத் தேவாரதிருவாசங் களிற் சில எடுத்துக்காட்டி யுபந்யஸித்தார்கள். பின்னர் அக்கிராஸனாதிபதி அபிப்பிராயஞ் சொல்லவே பகற் போஜனத்துக்காகச் சபைகலைந்தது.

பிற்பகல் 3-30 மணிக்கு மறுபடியும் ஸபைகூடிற்று. அக்கிராசனாதிபதி யவர்கள், "சினமின்மை" என்னும் விஷயத்தை யுபந்யஸிக்கும்படி சொக்க லிங்கம்புத்தூர் மாணிக்கவாசக வித்தியாசாலைத் தலைமையாசிரியர் பிரம்மஸ்ரீ ரா. நரமமூர்த்தி ஐயரவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். அவர்களும் சினத்தி னால் உண்டாகும் கேடுகளையும் சினமின்மையினாலுண்டாகும் பீடுகளையும் தக்க மேற்கோள்களுடன் இனியகுரலுடனும் சாந்தகுணத்துடனும் எடுத் தோதினார்கள். பின் "அடைந்தோர்ப் புரத்தல்" என்னும் விஷயத்தைக் காரைக்குடித்தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ சு. சிதம்பரமையர் அவர்கள் எடுத்துக் கொண்டு சரண்புகுந்தவர்களைக் கைவிடாது காப்பாற்றவேண்டுவது கடமை யென்றும் இதையே பெருஞ்செயலாகப் பெரியோர் மதித்திருந்தனரென்றும்

கம்பராமாயணம் முதலியவற்றிலிருந்து மேற்கோள்காட்டி நன்கு அநுபவ முறையாக உபந்யசித்தார்கள். பிறகு "கற்பு" என்னும் விஷயத்தைப்பற்றிக் கண்டனூர் ஸ்ரீமான் மு. ராம. சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள் கற்பின்மகிமை அதையநுஷ்டித்தார் பெருமை இவற்றுக்கெல்லாம் தக்க மேற்கோளும் கதைகளும் சொல்லியும், கற்பு பெண்கட்கு மாத்திரமேயன்றி ஆண்கட்கும் அவசியமானதென்றும் விரிவாக உபந்யசித்தார்கள். பின்னர் அநுஷ்டானத்துக்காக ஸபைகலைந்து பிறகு 7-30 மணிக்குத் திரும்பவும்கூடிற்று. "அதமத் ராவண ஸம்வாதம்" என்னும் விஷயத்தைக் காரைக்குடிக் கம்பராமாயணப்ரசாரகர் பிரம்மஸ்ரீ எம். வி. கோவிந்தராஜையங்கார் அவர்கள் கம்பராமாயணத்தை யாதாரமாகக்கொண்டு உபந்யஸித்தார்கள்.

பிறகு ஸபாநாயகர் அவர்கள் எழுந்து முடிவுரையாக நமது பாஷை, நமது பூர்விகர், அவர்களது ஆசாரங்கள், இவற்றைஎடுத்து விரித்துச் சொன்னதுடன் கல்வி தேசபாஷையின் மூலமே கற்பிக்கவேண்டுமென்பதையும், அதுவே இப்போது பத்திரிகைகளின் பேச்சுக்கள் என்றும், ஆரியத்தையும் ஆங்கிலத்தையும் ஆசாரத்துக்கும் ஜீவனத்துக்குமாகக் கற்பிக்க வேண்டுமென்றும், இந்நாட்டில் எங்கும் ஸபைகளும் கலாசாலைகளும் இன்னும் அதிகமாக ஏற்பட வேண்டுமென்றும், இவ்வூரிலும் இந்த ஸபையுடன் ஒருகலாசாலையும் நடைபெற வேண்டுவது அவச்யமென்றும் விரிவாகச் சொன்னார்கள்.

பிறகு, லால்குடி பிரம்மஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரியாரவர்கட்கு ஸபையோர்களால் தங்கத்தோடா அளிக்கப்பெற்றது. பின்னர், அக்கிராசனாதிபதி உபந்யாஸகர் முதலானவர்க்கு ஹாரசந்தன தாம்பூலாதிகள் காரியதரிசியவர்களால் வழங்கப்பெற்று ஸபையோருள்பட யாவர்க்கும் வந்தனோபசாரங்களும், ராஜவாழ்த்தும் ஆங்கிலமன்னர்க்கே ஜயமுண்டாக வேண்டுமென்ற ஈசுவரப்பிரார்த்தனையும் அடியிற்கண்ட தீர்மானங்களும் செய்யப்பெற்று மங்களகரமாக ஸபைநிறைவேறி வாத்யகோஷத்துடன் ஸபாநாயகரை ஸபையார் விடுதியில் விட்டுவந்தார்கள்.

## தீர்மானங்கள்.

1. கண்டனூர் நகரத்தார்கள் நமது கேசுக்கட்சியார்க்கே வெற்றிகிடைக்க வேண்டுமென்று கோருகிறார்கள்.

2. பள்ளிக்கூடங்களில் தமிழ்ப்பாஷையையே பிரதான பாஷையாக ஏற்படுத்த வேண்டுமென்றும் கோருகிறார்கள்.

கண்டகேளித்தோன்.